சுதேசமித்திரன்

12—9—48

விலை 4 அணா

THE SWADESAMITHRAN

ILLUSTRATED WEEKLY



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

1-WW108-111' W. WOODWARD LTD LONDON. ENGLAND

விட்டோபெரின்

இரும்புசத்து, விட்மின்கள் லோஹாதிகம் அடங்கியுள்ளது

எல்லாவித சரீர பலவீனத்துக்கும் இன்றியமையாதது.

குழந்தைகளுக்கு வளர்த்தியை அபிவிருத்தி செய்து சரீரத்தை புஷ்டியாக வளரச் செய்கிறது.

தி மைசூர் இன்டஸ்டிரியல் அண்ட் டெஸ்டிங் லாபரெடரி லிமிடெட, மல்லேஸ்வரம், பெங்களூர் இவர்களால் தயார் செய்யப்பட்டது.

ஒரு I·T·L தயாரிப்பு

விற்பனை ஏஜண்டுகள்
பெஸ்ட் அண்ட் கம்பெனி லிட்.
தபால்பெட்டி 63 சென்னை.

பரிசு! **பரிசு !!**

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாருதீர்கள்.

பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனுன ஆர். கிருஷ்ணு பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உரை அனுப்பினுல் 50—0-0-3 பொட்டலம் இனும்,

S. M. கிருஷ்ணு அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு.
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானுல் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸ்லேன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்,

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச்சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப் படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள் :

சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,
மைலாபூர், : : மதராஸ்.

Sole Selling Agents:
என் ஸீ ஏஜன்ஸீஸ்,
2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS.
Consult: **Dr. V. ராஜரத்னம்,**
For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து–பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்–ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்ப்ராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசிகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

உங்கள் எதிர்காலம்

பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

சுதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்.
மானேஜர்: ''சுதேசமித்திரன்'' புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னுடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

நீங்கள் வாங்கும் சரக்கின் பெறுமானம் நீங்கள் கொடுக்கும் பணத்தின் மதிப்புக்குக் குறையாமல் இருக்கிறதா ?

விலை குறைவாயிருக்கிறதென்று எப்பொழுதும் மட்டம் சரக்குகளை வாங்காதிர்கள். அப்படி வாங்கினல் நீங்கள் கொடுக்கும் பணத்தின் முழுப்பெறுமானத்தையும் அடைந்தவர்களாகமாட்டீர்கள். அவ்விதமின்றி விலை சிறிது அதிகமானலும் நல்ல சரக்கையே வாங்குவீர்களானல், நீங்கள் கொடுக்கும் பணத்தின் முழுப்பெறுமானத்தையும் அடைந்தவர்களாவீர்கள்.

இந்த அடிப்படையான உண்மை எல்லா சரக்குகளின் விஷயத்திலும் பொருந்தும்.

டாப்பியோக்கோ மாவு விஷயத்திலும் பொருந்தும். டாப்பியோக்கோ மாவு வாங்கும்பொழுதும் இம்முறையையே கைக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

A. V. S. டாப்பியோக்கோ கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்படுபவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்குஅத்தாக்ஷியாகமைக்ருஸ்கோப் மூலம் பரீட்சிக்கப்பெற்று நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம்.

மூட்டையின் தையல் முகப்பில் A. V. S. என்ற மார்க்குகள் அடங்கிய ஈய சீல் கட்டியிருப்பதுதான் இப்பொழுது மார்க்கட்டில் பிரபல்யமாகிவரும் A.V.S.டாப்பியோகா மாவு 'A' குவாலிட்டி.

டெக்ஸ்டைல் மில்கள், புரொவிஷன் ஸ்டோர்கள், பிஸ்கட் கம்பெனிகள், சிற்றுண்டிசாலைகள் மற்றும் பல தொழிற்சாலைகளுக்கும் நாங்கள் உயர்தரமானதும், சிக்கனமானதுமான 'A' குவாலிட்டி மாவையே பெரும்பாலும் சப்ளை செய்து வருகிறோம். எங்களிடம் கிடைக்கும் மற்ற சரக்குகள்:—முதல்தரம் ஜவ்வரிசி, மஞ்சள் கடலை எண்ணெய், சுருட்டுப் புகையிலை, பீடிபுகையிலை முதலியன.

உறுதியானதும், 5 அந்தர்வரை எடை செய்யக்கூடியதுமான 'பைபீல்ட்' வேயிங் மிஷின் தராசுக்கு நாங்கள் பிரதம ஏஜண்டுகள்: தராசின் கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

விண்ணப்பிக்கவும்:—

A. V. சுப்ரமண்யம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ் & ஜெனரல் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள், 94,பார்க்ரோடு, ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க........................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..............................அணு 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க.......................................ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

☞ வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்.

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோகினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்குச் சிறந்த வாசனை எண்ணெயாகும், விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்

சாம்பாக்	ரூ. 2-0	கதம்பம்	ரூ. 1-8	ஹீனு	ரூ. 1-8	மோத்தியா	ரூ. 1-0
காஷ்	,, 2-0	மல்லிகை	,, 1-8	லில்லி	,, 1-0	ஸ்விட்	,, 1-0
கேவ்டா	,, 2-0	ரோஸ்	,, 1-8	தாமரை	,, 1-0	மோதியா	,, 1-0
மஸக்	,, 2-0	போகுல்	,, 1-8	கோலோன்	,, 1-0	ஐடியல்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக்கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ் வி.பி. செல்வு வேறு. இலவசமாக காட்லாக் அனுப்பப்படும். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதவும்,

S. PAUL & Co., (S. W.) 4, Hospital St., Dharamtala, **Calcutta 13.**



மெண்டெக்ஸ் மாத்திரைகள்

ஸ்திரீகளுக்கு அடிக்கடி ஏற்படும் உபாதைகளுக்கு இன்றியமையாத ஔஷதம். தவறுமல் உடனே குணமளிப்பது. ஒரு புட்டி விலை ரூ. 7/8. வி. பி. செலவு தனி. விவரங்களுக்கு எழுதவும்.

என்மார் மாத்திரைகள்

இளமையூட்டவல்ல இம்மாத்திரைகள் ரத்த சோகை, ஞாபக சக்திக் குறைவு, நரம்புத்தளர்ச்சி முதலியவற்றை நீக்கி, ஜீரண சக்தியை விருத்தி செய்யும். டாக்டர்களால் சிபார்சுசெய்யப்படுவது. ஒரு புட்டி விலை ரூ. 7/8. விவரங்களுக்கு எழுதவும்.

ஸ்டெர்ன் & கம்பெனி,
187, மவுண்ட்ரோட், மதராஸ்.

முத்து கழுத்து சங்கிலி:



இமிடேஷன் ஜூவல்கள் (வைரம், பச்சை, சிகப்பு அல்லது நீலம்) பதித்த ஸ்திரீகளுக்கான சிறந்த கழுத்து சங்கிலி. க்ரீம் டிண்டுகளுடன் முத்துக்களும் உண்டு. நிரந்தர கலர், லாக்கெட்டுடன் முழுசைஸ் ரூ. 3–10. இமிடேஷன் ஜூவல் பதித்த தங்க மோதிரம் மேல்கண்ட ஜூவல்களுடன் டஜன் ரூ. 5–8. ஜூவல் இல்லாது பூ வேலைகளுடன் டஜன் ரூ. 4–8. ஒருடஜன் எந்தவித மோதிரம் வாங்கினலும் மேற்கண்ட கழுத்து சங்கிலி இனம். எல்லாவற்றிற்கும் தபால் செலவு இலவசம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத கோருகிறோம்.

★

HENA AGENCY,
No. 14, Dr. Jagabandhu Lane,
Bowbazar P. O., Calcutta. (M/S.W.)

அழகிய பித்தளை, தாமிர, வெண்கல பாத்திரங்களுக்கு கோவையில் சிறந்த இடம்.

பள்ளிக்கூட ஹாஸ்டல்கள், காண்டின்கள் இன்னும் சர்க்கார் இதர ஸ்தாபனங்களுக்கும் சப்ளை செய்பவர்கள்

K. இராமச்சந்திரன்,

பாத்திர வியாபாரம்,

பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

மறுக்க முடியாத உண்மை !
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே !!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். | 9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

Lovely long hair

ASOKA AMLA

HAIR OIL

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St.
Royapuram, Madras.

ஸ்ரீ சாயிநாதய நம :

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ.	5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	„	1.
விவாக பொருத்தம்பார்க்க	„	3.
ஆயுள் பலன் எழுத	ரூ.	100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

பிரசித்தி பெற்ற

"காஸினோ"

முகப்பவுடர்

உங்கள் முகத்தை பொலிவுடன் பிரகாசிக்கச்செய்கிறது.

வாங்கும்பொழுது காஸினோ மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS I

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

விநோத கதா மஞ்சரி

விலை ரூ. 1—0—0
(தபால் செலவு பிரத்யேகம்)

மானேஜர் : " சுதேசமித்திரன் " புத்தகசாலை,
விக்டரி ஹவுஸ் மவுண்ட்ரோட், சென்னை.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷிமி பிரசாதம்
(லெப்பர் கியூர்)
18 குஷ்டங்களேயும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளே, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்.
40 நாட்களில் குணம்
தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ். | லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன, ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும், தபால் செலவு ப்ரத்தியேகம்,

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

எழுதும் அன்பர்களுக்கு

"மித்திரன்" வாரப்பதிப்புக்கு விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில், தெளிவாக "வாரப்பதிப்பு" என்று எழுதியனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் விலாசமிட்ட தபால் கவர்களையோ, தபால் தலைகளையோ சேர்த்தனுப்பவேண்டும்.

—ஆசிரியர்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"
(Regd)
குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.
கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி | திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

ஸ்ரீமத்பகவத்கீதை
★
சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்தியாயராயிருந்த கீர்த்தனசார்ய ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் பீ. ஏ. எழுதியது.
மூலத்துடனும், அத்வைத வசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப் பட்டது.
★
முழுகாலிகோ பயிண்டு செய்தது.
விலை ரூ. 3-8-0
(தபால் செலவு 0-8-0)
இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.
★
எமது எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ் செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.
★
புத்தக ஜாபிதாவுக்கு எழுதவும்.
★
மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ்
மவுண்ட்ரோடு, மதராஸ்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆவணி௴ 28௳ ★ 1948-௵ செப்டம்பர்௴ 12௳ No. 33

தொழிலாளர் பாதுகாப்பு

இந்தியா சுதந்திரமடைந்து முதலாவது ஆண்டு பூர்த்தியாகி இரண்டாவது வருஷமும் துவங்கியிருக்கிறது. அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டோம் என்ற எண்ணத்தினால் ஏற்பட்டிருக்கும் உள்ளப் பூரிப்பொன்றைத் தவிர மற்ற விஷயங்களைக் கவனிக்கும்போது மக்கள் குதூகலிப்பதற்கு எதுவுமில்லை. சுதந்திரமடைந்த கையோடு அநேக விதமான சிக்கல்களும், நெருக்கடிகளும் நாட்டில் முளைத்தன. அரசியலில் அதிகாரத்தைக்கைப்பற்ற சுயநலக்கும்பல்களின் விஷமப்பிரசாரங்கள் முற்றக்கண்டோம். பணப்பெருக்கம் ஒருபுறத்திலும், பண்டங்களின் உற்பத்திச்சுணக்கத்தால்பஞ்சநிலைமை ஒருபுறத்திலும் நாட்டைக்கவிந்து கொண்டிருக்கின்றன. எந்தநாடும் சாமானியமாகச் சமாளிக்கமுடியாத மகத்தான பிரச்னைகளை நேரு சர்க்கார் எதிர்நோக்கித் தீரமாகச் சமாளித்து வருவது தெளிவு. தேசத்தின் மிக்க நெருக்கடியான இத்தருணத்தில் மக்களின் ஒரு முகமான ஆதரவு சர்க்காருக்கு அத்தியாவசியம். முக்கியமாக இதில்தொழிலாளர்களின் பொறுப்பு ரொம்ப மகத்தானது.

தொழிலாளர் தகராறுகள் அடிக்கடி ஏற்படுவதால் உற்பத்தி தடைபட்டு, அது சகலரையும் பாதித்து வருகிறது. நாட்டின் க்ஷேமத்தில் நாட்டம்கொண்டவர்கள் எல்லாம் இத்தகைய துர்பாக்ய நிலை கண்டு மனம் வெதும்புவது இயற்கை. எனவே இந்நிலைமை விரைவில் திருந்தும் நோக்கத்தோடு சமீபத்தில் இந்திய பார்லிமெண்டில் இரண்டு முக்கியமான தொழிலாளர் சட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றனர். இச்சட்டங்கள், பொதுவாக சகலவிதமான தொழிலாளர்களுக்கும் திருப்தி அளிக்குமென்று சொல்ல முடியாவிட்டாலும், அவை அவர்களில் ஒரு சிலரது நலனுக்கு உகந்ததாகவே அமைந்திருக்கின்றனவென்பதில் ஆட்சேபமில்லை.

சுரங்கத் தொழிலாளர்களுக்குப் பிராவிடண்ட் ஏற்படுத்தி போனஸ் திட்டங்கள் வகுக்கும் சட்டம் ஒன்று; தொழிற்சாலைகள் சட்டம், மற்றொன்று தொழிலாளர்களுக்குப்பிராவிடண்ட் நிதி ஏற்படுத்த வேண்டுமென்று சட்டபூர்வமாக ஓர் ஏற்பாட்டை வகுப்பதென்பது இந்தியாவில், ஏன், உலகிலேயே இது முதல் தடவையென்று இந்திய சர்க்காரின் தொழில் மந்திரி அன்று தமது ரேடியோப் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். இவ்வகுப்புத் தொழிலாளர் தமது அந்திய காலத்தில் எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் நிர்க்கதியாக நிற்க வேண்டிய பரிதாப நிலையை இச்சட்டம் துடைக்கும்.

தொழிற்சாலையில் சேவை செய்யும் தொழிலாளர்களைப்பற்றியது இரண்டாவது சட்டம். அடுத்த ஏப்ரல் முதல் அமுலுக்கு வரவிருக்கும் இச்சட்டப்படி, தொழிலாளர்களின் பத்திரத்தன்மை, ஆரோக்கியம், க்ஷேமம் இவற்றிற்குக் கேடு விளைவிக்கும் வகையில் எந்தத் தொழிற்சாலையிலும் நியமனங்கள் செய்யக்கூடாதென்பது இதன் அடிப்படைக் கருத்து. விசை கொண்டு இயங்கும் தொழிற்சாலைகள் தவிர, விசையின்றி நடத்தப்படும் இதர தொழிற்சாலைகளுக்கும் இது பொருந்தும். இது தவிர கண்டபடியெல்லாம் தொழிற்சாலைகள் முளைப்பதற்கும் இடமேற்படாதபடி இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டிருப்பது கவனத்திற்குரியது. புதிதாக ஆரம்பிக்க விரும்பும் எந்த தொழிற்சாலையும் அதன் திட்டத்தைச் சர்க்காரிடம் முன்னதாக சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டும். தொழிலாளர் க்ஷேமத்துக்கு இவ்வம்சம் பெரிய உதவியாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. வேலை நேரம், வயது எல்லை இவற்றைப் பொறுத்தும் சட்டத்தில் ஷரத்துகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

—அடுத்த பக்கம்



சென்னை மாகாணத்தின் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டுச் சென்ற வாரம் பதவி ஏற்றுக்கொண்ட பவநகர் மகாராஜா ஸ்ரீ ஸர் கிருஷ்ணகுமார் ஸிங்ஜி பவஸிங்ஜியும், மகாராணியும் மவுண்ட்ரோடு மார்க்கமாக ஊர்வலம்சென்று ராஜாஜிஹால் அடைந்தனர்

பார்லிமெண்டில் நிறைவேறியுள்ள இவ்விரு சட்டங்களும் தொழிலாளர்களின் ஒரு சிறு பிரிவினருடைய ஒரு சில அம்சங்களைத்தான் பூர்த்தி செய்யும். தொழிற்சாலைகளில் ஊழியம் புரியும் தொழிலாளர்களின் தொகை சுமார் 35 லட்சம். இதர துறைகளில், முக்கியமாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் தொகையோ கோடிக்கணக்கு. அத்தகையவர்களின் கதி என்னவென்பது குறித்துப் பேச்சில்லை. எனவே இந்தியத் தொழிலாளர்களை எல்லாம் மொத்தமாகச் சேர்த்து அவர்களது வளத்துக்கு ஒத்த முறையில் இச்சட்டம் எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்று பார்த்தால், புரட்சிகரமான மாறுதலெதுவும் இல்லையென்பது துலங்கும். இருப்பினும் இப்போது நிறைவேறியுள்ள இரு சட்டங்கள் தவிர ஏற்கனவே தொழிலாளர்களுக்கு இன்ஷூரன்ஸ் வசதி அளிக்கும் சட்டம் நிறைவேறியுள்ளது. இவை எல்லாவற்றையும் கூட்டிப்பார்க்கையில், தொழிலாளர்கள் திருப்திபடுவதற்கு இடமிருக்கிறது. எல்லோரும் ஒன்றுசேர்ந்து தொழிற்சங்க முறையில் கிளர்ச்சி செய்யும் தொழிலாளர்கள் விஷயத்தில்மட்டும்தான் சர்க்காருடைய சிரத்தை திரும்பியிருப்பதாக சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கும் மேற்படி மசோதாக்களிலிருந்து தெரிய வருகிறது. இத்தகைய வகுப்புத் தொழிலாளர்களைவிட அநேகமடங்கு அதிகமாகவுள்ள தொழிலாளர்கள் க்ஷேமாபிவிருத்தியிலும் சர்க்காருடைய கவனம் திரும்புமென்று எதிர்பார்க்கலாம்.

ராஜாஜி ஹாலில் புதிய கவர்னராக நியமனம்பெற்றுள்ள பவநகர் மகாராஜா பிரமாணம் எடுத்துக் கொள்கிறார். பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னார், மகாராஜா பிரமாணம் எடுத்துக்கொள்ளச்செய்தார். பிரதம மந்திரி, டாக்டர் ராஜன் முதலியவர்களுடன் சேர்த்து எடுத்த படம். (கீழ் படம்) புதிய கவர்னர் "ஜெய் ஹிந்த்" வணக்கம் செய்கையில் எடுத்த படம்.

பாரதியை வழிபடுவோம்

★

—புருஷோத்தமன்—

பாட்டுத் திறத்தாலே—வையத்தைப்
பாலித்த மாக்கவிஞன்

நாட்டு சுதந்திரத்தில்—மக்களின்
நாட்டத்தைத் தானிழுத்தோன்

வாட்டமெலாந் தீர்த்தோன்—தமிழர்
வாழ்வை மலரச் செய்தோன்

கோட்ட மெலாந் தீர்ந்தோன்—பாரதிக்
கோனை வழிபடுவோம்

அச்சத்தைப் போக்குவித்தான்—உளத்தில்
ஆண்மையை ஆக்குவித்தான்

மெச்சும் புகழ்க்கவியால்—இறந்தும்
மேலோனாய் ஆகிவிட்டான்

துச்சத்தைத் தள்ளிவிட்டான்—மடத்தைத்
தூவென்று எள்ளிவிட்டான்

அச்சமற்ற வீரன்—பாரதி
ஆணை வழி நடப்போம்

தித்திக்கும் பாக்களினைப்—படிப்போம்
தேசத்தொண்டு செய்வோம்

எத்திக்கும் பாரதிபேர்—பரவ
ஏற்ற நெறி புரிவோம்

(வேறு)

ஏட்டுக்கும் நாட்டுக்கும் தொடர்புண்டாக்கி
இன்தமிழில் மறுமலர்ச்சி தோற்று வித்த
பாட்டுக்கே ஒரு புலவன் ஏழை நண்பன்
பரநலத்தால் உள்ளமெலாம் கொள்ளைகொண்
[டோன்
தீட்டுக்கும் சாதிக்கும் பணியா வீரன்
தேனெழுதுந் தமிழருமை தெளியச்சொன்னோன்
நாட்டீரே அவனுக்கு நன்றி சொல்லி
நன்மை பல எய்திடுவோம் சேர்ந்து வாரீர் !

திடீர் பரீட்சை

தேச்சா

"கணக்குத் தப்பு சார்! கணக்குத் தப்பு சார்!" எனக் கூச்சல்கள் கிளம்பின. "இல்லை சார், வாளி ஓட்டைபோலிருக்கிறது" எனத் தன்னபிப்பிராயத்தை தெரிவித்தான் மற்றொரு மாணவன். "தொட்டியின் துவாரம் பெரிசு" என்றது மற்றொரு குரல். "ஸி தண்ணீர் இறைக்கவேயில்லையே! அவனைத் தள்ளிவிட்டால் கணக்குச் சரியாக வரும்!" என்றான் ஒரு வாண்டுப்பயல்.

இந்த கூக்குரல்களைப் பொறுக்க மாட்டாமல் "ஸைலன்ஸ்! ஸைலன்ஸ்!!" என்று கதறினான் ராமசுப்பு. சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக "ஏய், முத்து கணக்கை வாசி" எனக் கட்டளையிட்டான்.

"ஏ" என்பவன் ஒரு தொட்டியை 10 நிமிஷங்களில் நிரப்புவான். "பி" அதனை 15 நிமிஷங்களில் நிரப்புவான். "ஸி"க்கு 25 நிமிஷங்களாகும். ஆனால் தொட்டி ஓட்டையானதால் அதில் நிரப்பப்பட்ட தண்ணீர் 8 நிமிஷங்களில் காலியாகிவிடும். மூன்று பேரும் சேர்ந்து நிரப்பினால் தொட்டி நிரம்ப எத்தனை நிமிஷங்களாகும்?" நிதானமாக வாசித்துமுடித்தான் முத்து.

கரும் பலகையில் கணக்கைப்போட வாரம்பித்தான் ராமசுப்பு. நான்கு தடவை முயன்றும் பயனில்லை. தொட்டி நிரம்புவதாகக் காணோம். விடையிலிருந்து கணக்குப் போடும், விதத்தை ஆராயலாம் என்ற நோக்கத்துடன் கணித புத்தகத்தைப் புரட்டினான். ஆனால் அந்த 'இழவு' புத்தகத்தில் விடைகளைக் காணவில்லை!

இந்த தரும சங்கடமான நிலைமை ராமசுப்புவிற்குப் புதிதல்ல. விதியின் அன்றாட விளையாட்டு என்றுதான் கூற வேண்டும். பி.ஏ. பரீட்சையில் தோல்வியுற்றதால் பாடாவதிப்பட்டி ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியனாக அமர நேர்ந்தது. வேலையை ஏற்றுக்கொண்ட புதிதில், சிறுவர்களை மேய்ப்பது பிரமாதமல்லவென எண்ணினான். செய்யுள் முதல் தேகாப்பியாசம்வரை எல்லாப் பாடங்களையும் தானே கற்பிக்க வேண்டியிருந்ததால் சலிப்பு ஏற்பட்டது. பால்யத்தில் தலைமுழுகித் தொலைத்த கணிதபாடத்தைப் போதிப்பதில் அவன் பட்ட இன்னல்கள் பல. தசாம்சபின்னங்களும், தகு பின்னங்களும் அவனுடைய மனவமைதியைச் சின்னாபின்னம் செய்தன!

இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் சிகரம்போல் விளங்கினார் தலைமையாசிரியர் மாதவன்பிள்ளை. ஆசிரியர் தொழிலில் பழம்தின்று விதை போட்டவர். அவர் கல்வியிலாகா இன்ஸ்பெக்டர்களை ஐந்து நிமிஷங்களில் தமது கோட்டுப்பைக்குள் அடக்கிவிடுவார். அவருக்குத் தலைமையாசிரியர் பதவி ஓர் உபதொழில். கொடுக்கல் வாங்கல், சீட்டுப்பிடித்தல் முதலிய கைங்கர்யங்களில்ஈடுபட்டு வருவாயைப் பெருக்குவதிலேயே கருத்தாயிருப்பார். பணவேட்டைக்காக அவர் வெளியே கிளம்பும் நேரங்களில் எல்லாம், அவருடைய எட்டாவது வகுப்பை கவனித்துக்கொள்ளும்பொறுப்பு ராமசுப்புவைத்தான் சாரும்.

முன்பு விவரிக்கப்பட்ட சம்பவங்கள் எட்டாவது வகுப்பில்தான் நடைபெற்றன. நிலைமையை சமாளிக்கமுடியாமல், பொடி உறிஞ்சுவதற்காக, வகுப்பறைக்கு வெளியேயுள்ள வராந்தாவிற்கு வந்து சேர்ந்தான் ராமசுப்பு.

அங்கே ஒரு பேர்வழி, கையில் தோல்பெட்டியுடன் தன்னை நோக்கி வருவதைக்கண்ணுற்றான். ஆசாமி நல்ல உயரம். மார்புவரை தாடி படர்ந்து விளங்கியது. நீண்ட கோட்டும், பிடித்தமான கால்சட்டையும் அணிந்திருந்தார். வளைவான ஆற்காடு ஜோடுகள் பாதங்களை அலங்கரித்தன. தலையில் குல்லாய்; தோல் பெட்டியை குலுக்கியவண்ணம், அவனையணுகி ஸலாம் செய்தார். கணிதத்துடன் போராடித் தோல்வியுற்ற ராமசுப்புவிற்கு அவருடைய திடும்பிரவேசம் ஆத்திரத்தை விளைவித்தது.

வந்தவர், மூக்குக்கண்ணாடி அல்லது ஊதுபத்தி—வியாபாரியாகயிருக்க வேண்டும்" என யூகித்துக்கொண்டான். இந்த வியாபாரிகளை வெளியே கிளப்புவது எளிதல்லவென்பதை நினைவுபடுத்திக் கொண்டு, சுளித்த முகத்துடன் பேச்சைத் தொடங்கினான்.

"இப்பொழுது பாடசாலை வேலை நேரம். இந்த சமயத்தில் நீங்கள் தொந்திரவு செய்வது முறையல்ல. 'இழவு' ஹெட்மாஸ்டரும் கையெழுத்துப் போட்டுவிட்டு எங்கேயோ தொலைந்துபோயிருக்கிறார். அவர் இருக்கிற சமயம் வாருங்கள்" எனக்



கூறிக்கொண்டே வகுப்பறைக்குட் புக வாரம்பித்தான்.

"பாடசாலை நேரத்தில் தான் என் வேலை நடக்கும். ஹெட்மாஸ்டரில்லையென்றால் பாடசாலையிருக்கே! அதைப் பார்க்கலாமல்லவா?" என்றார் வந்த நபர்

"பாடசாலையைப் பாரும். நான் கணக்குச் சொல்லிக்கொடுக்கிற லட்சணத்தையும் பாரும். ஆட்சேபணையில்லை. ஆனால் உங்கள் நேரம் தான் விரயமாகும்."

"பள்ளிக்கூடங்களில் செலவிடும் நேரம், என்னைப் பொறுத்த மட்டில் விரயமல்ல."

ராமசுப்பு பொறுமையை இழந்தான். அந்த மனிதரை நேரடியாகத் தாக்கவாரம்பித்தான்.

"உங்கள் கண்ணாடி வியாபாரம் இங்கே நடக்காது. இங்கே ஒருவருக்கும் பார்வையில் ஊனம் கிடையாது. இந்த மடச் சாம்பிராணிகளுக்குப் புத்திதான் தேவை. அது இருந்தால் வாங்கிக் கொள்கிறேன்." என்றான்.

"நான் மூக்குக் கண்ணாடி வியாபாரியல்ல."

"அப்படியானால் ஊதுபத்தி வியாபாரியா? ஏது வாசனையையே காணோமே? இந்தப் பள்ளிக்கூடத்தின் யோக்யதைக்கு ஊதுபத்திதான் பாக்கி. இங்கேயிருக்கிற நாற்றத்தைக் கிளப்ப அது போதாது. சரி, நீங்கள் கிளம்புங்கள்" என நையாண்டியில் இறங்கினான் ராமசுப்பு.

இந்த விவகாரம் நடந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஐந்தாவது வகுப்பு ஆசிரியர் மாணிக்கம் பிள்ளை ஒரு வில்லைச் சேவகனுடன் சம்பாஷித்துக்கொண்டே, ராமசுப்புவை நோக்கி சமிக்ஞைகளின் மூலம் தந்தியடித்தார். ராமசுப்புவிற்கு விஷயம் புரியவில்லை. வியாபாரி விடாக்கொண்டனாகக் காணப்பட்டார்.

"வேறு வேலை கிடைக்காமல் நான் இங்கே தூங்கி யழுகிறேன் என்றால், வியாபாரிகளுக்கு ஜோலி கிடையாதா? எங்கேயாவது போய்த் தொலையும்," எனக் கூறி விட்டு தன் வகுப்பறைக்குச் சென்றான்.

மாணிக்கம் பிள்ளை அந்த வியாபாரியை ஆபீஸ் அறைக்கு அழைத்துச் சென்றார். சனியன் தொலைந்தது என்ற ஆறுதலுடன் மறுமுறையாக ஓட்டைத்தொட்டிக் கணக்கின்மீது கருத்தைச் செலுத்தவாரம்பித்தான் ராமசுப்பு.

அன்று ராமசுப்பு விழித்த முகம் சீரானதல்ல. ஹெட்மாஸ்டர் மாதவன்பிள்ளை அழைப்பதாக ஒரு பையன் வந்து சொன்னான்.

"மிஸ்டர் ராமசுப்பு, இங்கே வாருங்கள். இவர்கள்தான் முஸ்லிம் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள். நமது பாடசாலையைத் திடீரெனப் பார்வையிட வந்திருக்கிறார்கள்" என்று அறிமுகம் செய்துவைத்தார். கம்பீரமாக நாற்காலியில் அமர்ந்திருந்த ஊதுபத்தி வியாபாரியை நோக்கி பிரமித்து நின்றான் ராமசுப்பு! அவர் கையில் பாடசாலையின் விஸிட்டர் குறிப்புப் புத்தகம் காணப்பட்டது.

"நான் ஒன்றும் குற்றம் குறை எழுதவேண்டிய அவசியமில்லை. அந்த ஆசிரியரையே எழுதச் சொல்லுங்கள். அதன் கீழே கையொப்பமிடுகிறேன்" என்று கேலி செய்தார் இன்ஸ்பெக்டர்.

மாதவன் பிள்ளை எப்படி அந்த உத்தியோகஸ்தரை திருப்தி செய்தார் என்பது தொழில் மர்மங்களில் ஒன்று. ஆனால் அடுத்த வாரத்தில் முஸ்லிம் பாடசாலை ஆசிரியர்கள் சங்கத்தில் "ஆரம்ப கணித போதனை" என்ற விஷயத்தைப்பற்றி சொற்பொழிவு ஆற்றவேண்டிய பொறுப்பு ராமசுப்பு தலையில் விழுந்தது!

அட்டைப்படம்

ஐக்கிய நாட்டுப் பந்தோபஸ்து சபையின மூன்றவது பொதுக்கூட்டம் பாரிஸில் நடக்கிறது. இதன் நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்காக இந்தியாவிலிருந்து 16 அங்கத்தினர்கள் கொண்ட பிரதிநிதிக் கோஷ்டி போகிறது. மாஸ்கோவில் இந்தியாவின் தூதராகவுள்ள ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் இக்கோஷ்டியை அழைத்துச்செல்வார். இதற்கு முன்னர் இந்திய ர்க்காரைக் கலந்தாலோசிப்பதற்காக ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் சென்ற வாரம் மாஸ்கோவிலிருந்து இந்தியா வந்து சேர்ந்தார். அவர் 15-ந்தேதிவாக்கில் தூதுக்கோஷ்டியோடு பாரிஸ் புறப்படுகிறார்.

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் பண்டித நேருவின் இளைய சகோதரி. சென்ற ஆகஸ்ட் மாதம் 18-ந்தேதியோடு அவருக்கு 48-வயது பூர்த்தியாகி 49-வது வயது பிறந்திருக்கிறது. வீராங்கனை ஸ்ரீமதி விஜயலட்சுமி, தேசத் திருப்பணியிலேயே உடல், பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்த தியாகக் குடும்பத்தின் சிறந்த ஒளி. சுதந்திர இந்தியாவின் முதல் ஸ்திரீ தூதராக, ருஷ்யாவில் பதவி தாங்குகிறார். அவரது படமொன்றே இவ்விதழை அலங்கரிக்கிறது.

தடை எதற்கு

(குயிலன்)

மல்லிகை மொட்டு மலர்ந்து சிரித்தது
வாசம் கமழுது தோட்டத்திலே
பொல்லாத வேலியின் மத்தியிலே நின்று
பூவினைக் கொய்திட வொட்டுதில்லை.

வட்ட வடிவினில் தண்ணென வெண்மதி
வந்தொளி வானிடைச் சிந்துகிறாள்
பட்டுநிலாவிற்கை வீசிநடந்திடப்
பாவி என் கால்விலங் கொட்டுதில்லை

மூங்கிலின் ஓரத்தில் தெங்கிளநீர் தொங்கும்
மோகனக் காட்சியைக் காணுகிறேன
ஆங்கதைப் பெற்றுமே தாகந்தவிர்ந்திட
ஆகாதென்றே தடை சொல்லுகிறார்?

செக்கச் சிவந்திட்ட கோவைப்பழமதில்
செம்மது தேங்கித் துளிர்க்குதடா
மிக்கப்பழுத்திட்ட அக்கனி தின்றிட
வீணர்கள் ஏன்தடை செய்வதுவாம்?

சங்கத்தின் மேலொரு தாமரைபூத்தது
சார்ந்ததில் தேனுண வண்டுசென்றால்
எங்கிருந்தோபல கூக்குரல்கள்! இதில
ஏதேனும் நீதியைக் கண்டதுண்டோ?

மாம்பழம் ரெண்டு மணத்திருக்கக்கண்டு
வாய்வைத்துக் கவ்விட நான்முயன்றால்
வீம்புகள் பேசிட இந்தப்புவிமீது
வேண்டியமட்டும் மனிதருளார்!

சங்கீத வேட்டை

ஜெயராமன்

உலகத்தில் நல்ல ஸங்கீதசிட்சை பெற்று வீணையையோ பிடிலையோ வைத்துக்கொண்டு ஸுஸ்வரமாகவும் சுருதி சுத்தமாகவும் பாடக்கூடிய பெண்களுக்கு நல்ல ஸங்கீத ரஸிகனான கணவன் கிடைப்பதில்லை. நல்ல ஸங்கீத ஞானமுள்ள யுவர்களுக்கோ ஸங்கீதவிஷயமே தெரியாத பத்னிகள் வந்து வாய்ப்பதுதான் ஸகஜமாயிருக்கிறது. இது தம்பதிகள் விஷயத்தில் மாத்திரமல்ல. ரேடியோ விஷயமும் அப்படித்தான். எந்த பஜனை மடத்தில், எந்த ஸங்கீத ஸபையில் அல்லது எந்தக் கல்யாண வீட்டில் நல்ல ஸங்கீதக் கச்சேரிகள் நடக்கின்றன என்று அலைந்து கொண்டிருக்கும் ஸங்கீதப் பித்தர்களுக்கு வீட்டில் ஒரு ரேடியோ வைத்துக்கொள்ளக் கூடிய அந்தஸ்து ஏற்படுவதில்லை; அல்லது இவர்களுடைய அந்தஸ்திற்குத் தக்கபடி ரேடியோவின் விலையும் குறைவதில்லை. ரேடியோ வைத்துக்கொள்ளக் கூடிய அந்தஸ்து உடையவர்களுக்கு ரேடியோ வாங்குவதற்கு மனம் வருவதில்லை. ஒரு கால் வாங்கினாலும் குழந்தைகளும் ஸ்திரீகளும் அதை வைத்துக் கேட்கிறார்களே தவிர ரேடியோ வாங்கினவர்களுக்குத் தங்களுடைய பல ஜோலிகளுக்கிடையே அதனிடம் உட்கார்ந்து ஸங்கீதம் கேட்பதற்கு அவகாசம் இருப்பதில்லை. தவறிப்போய்ச் சிறிது அவகாசம் ஏற்பட்டாலும் அவர்கள் "கிரிகெட் ஸ்கோர்" கல்லணைக் கால்வாயின் ஜலமட்டம் இவைகளைத் தவிர வேறு எதையும் கேட்பதில்லை!

நானும் என் நண்பன் ராஜுவும் பெரிய ஸங்கீதப் பித்தர்கள். ஒரு நல்ல ஸங்கீதக் கச்சேரி கேட்பதற்காக நாங்கள் பல சமயங்களில் பெரிய மழைகளில் நனைந்திருக்கிறோம். ஸைக்கிளில் விளக்கில்லாமல் 15 மைல் வேகத்தில் போய் போலீஸ்காரர்களுக்கு "டோக்கர்" கொடுத்திருக்கிறோம். ஸங்கீத ஸபையில் மெம்பர்களாகச் சேர்ந்து மீட்டிங்குகளில் கமிட்டி மெம்பர்கள் மீதும் ஸெக்ரட்டரி மீதும் நல்ல கச்சேரிகளை ஏற்பாடு செய்ததற்காகக் குற்றம் சாட்டி "எதிர்கட்சி"யிலிருந்து வாதாடியிருக்கிறோம். ஏனென்றால் எங்கள் ஊரில் உள்ள ஒரே ஸங்கீத ஸபையான "சித்ரஸேனா ஸங்கீத ஸபா"வில் தேங்காய் மூடி" பாகவதர்களைத்தவிர வேறு ஒருவரையும் வரவழைப்பதற்குச் சக்தியில்லை. கல்யாணங்களில் பெரிய ஸங்கீதக் கச்சேரிகளை வைத்து நடத்தும் தனிகர்கள் வீடுகளிலிருந்து எங்களுக்கு அழைப்புப் பத்திரிகை வரக் காரணமில்லை. எங்களுக்கு அழைப்புப் பத்திரிகை அனுப்பும் கல்யாண வீடுகளில் நல்ல ஸங்கீதக்கச்சேரி நடக்க நியாயமில்லை. ஆகையால் நாங்கள் அழைக்கப் பெறாத பெரிய வீட்டுக் கல்யாணங்களில் நல்ல ஸங்கீதக் கச்சேரிகள் நடக்கும் சமயம் பார்த்து பளபளப்பான ஜரிகை, அங்கவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு ஏதோ எங்களுக்கு விசேஷ அழைப்புப் பத்திரிகை வந்து கல்யாணம் விசாரிக்கப் போவதுபோல் வெகு

"...கல்யாணப் பந்தலிற்குள் நுழைந்து வித்வான்கள் அமரும் இடத்திற்கு வெகு ஸமீபத்தில் போய் உட்கார்ந்து விடுவோம்..."

வேகமாகக் கல்யாணப் பந்தலிற்குள் நுழைந்து வித்வான்கள் அமரும் இடத்திற்கு வெகு ஸமீபத்தில் போய் உட்கார்ந்து விடுவோம்! இவ்வாறு அழைக்கப் பெறாத இடங்களுக்குப் போய் அருகில் இருந்து ஸங்கீதக் கச்சேரிகளைக் கேட்டு விடுவதற்கு நாங்கள் கையாளும் முறைகள் பலவிதம். எந்த சமயத்தில் எவர் வந்து "நீங்கள் யார் ஸார்?" என்று கேட்டுவிடுவார்களோ என்ற பயம் மனதில் இருந்தாலும் வெளிக்கு நாங்கள் நிர்ப்பயமாயும், வெகு ஸ்வாதீனமாயும்தான் காணப்படுவோம். முக்கியமான ரகசியம் என்னவென்றால் பெரிய வீட்டுக் கல்யாணங்களில் கச்சேரி கேட்கப் போனால் ஒரு நல்ல விசிறி மடிப்பு ஜரிகை அங்கவஸ்திரம் கட்டாயம் இருக்க வேண்டும்! இதில் கரை மாத்திரம் சரியாக இருந்தால் போதும். உள்புறம் எவ்வளவு ஜீர்ணமாகி இருந்தாலும் பரவாயில்லை! இரண்டாவதாகக் கல்யாணப் பந்தலையணுகியதும் வாயில்புறம் தயங்கி நிற்கக்கூடாது. "விறு விறு" என்று உள்ளே பிரவேசித்துவிட வேண்டும். கல்யாண வீட்டுக்காரர் நமக்குப் பரிச்சியமில்லாவிட்டாலும் நமக்குப் பரிச்சியமான இரண்டொருவர் அவ்விடம் வந்திருக்கலாம் அல்லவா? அவர்கள் முகத்தைக் கண்டதும் யோகக்ஷேமம் விசாரித்துக்கொண்டு அருகே போய் அமர்ந்துவிட வேண்டும். ஆனால் நம்மைப் போலவே வந்திருக்கும் "ஓசி" ஆசாமிகளையே பார்த்துப் போகாமல் கொஞ்சம் பெரிய மனிதர்களாகப் பார்த்துப் புன்னகைபுரிந்துவிட்டு போக வேண்டும். அப்படி ஒருவரும் கண்ணில் தென்படாவிட்டால் ஸங்கீத வித்வானுக்கே ஒரு கும்பிடு போட்டு விட்டால் அவர் நிச்சயமாகப் பதில் குடும்பிடு போடுவார்! அல்லது நம்மைத் தெரிந்து கொண்டதுபோல் காட்டும் ஒரு செயற்கைப் புன்னகையேனும் புரிவார். ஏனென்றால் பல ஊர்களில் பல மேடைகளில் கச்சேரி செய்த பெரிய ஸங்கீத வித்வான்கள் பல பேர்களை அறிந்திருப்பார்கள். எல்லோர் முகங்களையும் அவர்களால் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்க முடியாது. நீங்கள் கும்பிடு போட்டால்அவர்கள் உடனே "இவர் யாராக இருக்கலாம்!" என்ற சிந்தனைக்கே இடம் கொடுக்கமாட்டார்கள். ஆகையால் பதில் கும்பிடோ அல்லது ஒரு செயற்கைப் புன்னகையோ கட்டாயம் எதிர்பார்க்கலாம். கச்சேரியில் உட்கார்ந்துவிட்டால் அநேகமாக ஒருவரும் உங்களைக் கிளப்பமாட்டார்கள். இந்தமுறைகளைத்தான் நானும், ராஜுவும் அனுசரிப்பது.

அந்த வீட்டுக்காரர் தம் நண்பர்கள் சிலருடன் சீட்டாடிக் கொண்டிருப்பார்.

கல்யாணக் கச்சேரிகளுக்குப் போய்ச் சில ஸமயம் பின் வாங்க நேரிட்டதும் உண்டு. நானும், ராஜுவும் ஒரு கல்யாணப் பந்தலிற்குள் பிரவேசிக்குமுன் வெகு நாஸூக்காக ஒரு கனவானால் நிறுத்தப்பட்டோம். "நீங்கள் யார் ஸார்? உங்களுக்கு அழைப்புப்பத்திரிகை வந்ததா?" என்று கேட்பதற்காகத்தான் அவர் எங்களை இழுக்கிறார்: எங்கள்மானம் கப்பலேறி விட்டது என்று எங்கள் மனப்பிரமை கூறிற்று. ஆனால் உண்மையில் விஷயம் வேறு. ஒருவருக்கும் முகூர்த்த தாம்பூலம் கொடுக்க மறந்து போகக் கூடாதே என்பதற்காக அந்தக் கல்யாண வீட்டுக்காரர் வெளியில் ஒரு சிறு கொட்டகையில் தாம்பூலம் சந்தனம் முதலிய சாமக்கிரியைகளுடன் உட்கார்ந்திருந்தார்! அதைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் நாங்கள் நிறுத்தப்பட்டோம் என்று தெரிந்தது. இருந்தாலும் வீட்டுக்காரர் தாம்பூலம் கொடுக்கும் பொழுது "தாங்கள் யார் தெரியவில்லையே!" என்று கேட்டு விட்டால்



"பாட்டைப்பற்றி நான் கேட்கவில்லை! 'ரேடியோ ஸெட்' எப்படி என்றேன் என்பார்.

என்ன செய்வது என்று பயந்து "கியாஸ்லைட்" நிழல்களில் மறைந்து நழுவி விட்டோம்.

பேப்பர்களில் ரேடியோ புரோகிராம்களை ஆராய்ந்து இன்றிரவு 7-45 முதல் 9 மணி வரை ஒரு நல்ல கச்சேரி என்று அறிந்ததும் யார் வீட்டில்போய் ரேடியோ கேட்கலாம் என்று நான் யோசித்துக்கொண்டிருக்கும் சமயம் வானொலியின் அன்றைய பக்கத்தைப் பிரித்துக் கையில்வைத்துக்கொண்டு "இரைக்க இரைக்க" ராஜு ஓடி வருவான். இருவரும் மண்டையை உடைத்துக்கொண்டு யோசித்து எங்களுக்குப் பழக்கமானவர்களில் ரேடியோ வைத்திருப்பவர்கள் யார் யார் என்று மானஸீகமாக ஒரு "ஜாப்தா" தயாரித்துக்கொள்வோம். மாலை 7-மணியிலிருந்து ஒவ்வொரு வீடாகப் புகுந்து ஏதோ அகஸ்மாத்தாய் வந்தது போல் பாசாங்கு பண்ணி அவர்கள் ரேடியோ வேலை செய்கிறதா? அவர்கள் அன்றிரவு அதைப்பாட வைக்கப்போகிறார்களா? என்ற விவரங்களை சாமர்த்தியமாகக் கிரகிப்போம். சில சமயம் ரேடியோக்காரர் "இன்றைக்கு யார் கச்சேரி?" என்பார். "அது தெரியாதா! இன்று ஸங்கீத மகுடபதி காசிநாதய்யர் பாட்டல்லவா!" என்போம். அவர் அது என்ன பிரயோசனம் ஸார்! இப்பொழுது தான் 'ஜலமோஹினி' என்ற படத்தின் ரிகார்டுகளை ரேடியோவில் கேட்டோம் அதற்கு வராமல் போய்விட்டீர்களே! என்ன ஸங்கீதம் போங்கள்! இன்று இனி வேறு ஸங்கீதம் காதில் ஏறாது!" என்று கூறிவிட்டு ரேடியோவை நிறுத்திவிட்டு அதன்மேல் ஒரு காக்கி உறையைப் போட்டு மூடி விடுவார்.

ஒவ்வொரு காராபூந்தியாகச் சாப்பிட்டுக் கொண்டு ரேடியோ கேட்போம்.

மற்றொரு வீட்டை நோக்கிச் செல்வோம். அந்த வீட்டுக்காரர் தம் நண்பர்கள் சிலருடன் சீட்டாடிக்கொண்டிருப்பார். சில பையன்கள் ரேடியோவைச்சுற்றி உட்கார்ந்துகொண்டு ஒரு வினாடிக்கொருமுறை விசையைத் திருப்பி "டோக்கியோ" "ஹாங்காங்" முதலாக பெர்லின் வழியாக "பிரிஸ்கோ" வரையிலும், "படேவியா" முதல் "கொழும்பு" வழியாக "ஆக்லண்டு" வரையிலுமுள்ள எல்லா நிலையங்களையும் மாறி மாறி வைத்துக்கொண்டிருப்பார்கள். "ஏ கடவுளே! ஒரு நல்ல பொருளை அதைவைத்து அனுபவிப்பவர்கள் கையில் கொடுப்பது என்ற நல்ல புத்தி தங்களுக்கு எப்பொழுது வரப்போகிறதோ!" என்று நாங்கள் பகவானை தோத்திரம் செய்துகொண்டே மற்றொரு வீட்டைதேடுவோம்.

ஸௌம்ய நாராயண சர்மா என்பவர் ஒரு பென்ஷன் ஆசாமி. அவர் குமாரன் மிலிட்டரியில் இருக்கிறான். அவர் வீட்டிற்குப் போனால் ரேடியோ கேட்கலாம். ஆனால் ஒரு ஆபத்து உண்டு. ரேடியோவை வைத்துவிட்டு, அவர் பேசத் தொடங்கிவிடுவார். பஞ்சரத்னக் கீர்த்தனைகளில், ஆரபி ராகக்கிருதியை ஒரு பெரிய வித்வான் வெகு சுகமாகப் பாடிக்கொண்டிருக்கும்பொழுது "ரேடியோ, எப்படி!" என்று கேட்பார் சர்மா. "ரொம்ப அபாரமான பாட்டு" என்று நாம் கூறினால் "பாட்டைப்பற்றி நான் கேட்கவில்லை! "ரேடியோ ஸெட்" எப்படி என்கிறேன்!" என்பார். "ரொம்ப உயர்ந்த ஸெட்தான்" என்று கூறினால் சர்மா விடமாட்டார்." என் பையன் பஞ்சாமி வாங்கி வைத்த ரேடியோ இது. ஜப்பல்பூரில் காப்டனாக இருக்கிறான். ரொம்ப ஸத்புத்ரன் மிலிட்டரியில் இவன் வைத்ததுதான் சட்டம். ரேடியோ வேண்டாமடா என்றேன்; கேட்கவில்லை. பஞ்சாமியை உனக்குத் தெரியுமோ இல்லையோ!" என்று தொடங்கி அவருடைய திருக்குமாரன் 5 வயதில் கண்ணாடிக் கதவில் கல்லைவிட்டெறிந்தது முதல் ஆரம்பித்து மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குக் கட்டுவதற்கென்று கொடுத்த 15 ரூபாயை எடுத்துக்கொண்டு சொல்லிக்கொள்ளாமல் கல்கத்தாவிற்கு ஓடிப் போனது உள்பட அவன் இப்பொழுது ரூ. 940 சம்பளத்தில் காப்டனாக இருப்பதுவரையில் சொல்லித் தீர்த்துவிடுவார். அவர் பேசி முடியும்பொழுது ரேடியோவில் பி. பி. ஸி. செய்திகள் கூறிக்கொண்டிருப்பார்கள்.

சில சமயம் ரேடியோ இருக்கும் காபிஹோட்டல்களில் புகுந்து நானும், ராஜுவும் ஆளுக்குஒருஅணாவிற்குக் காராபூந்தி வாங்கி அதில் வடைத்தயிரை(தயிர் வடைவிற்ற பிறகு தட்டில்எஞ்சியிருக்கும் வஸ்துவை) ஊற்றச்சொல்லி ஊறவைத்து ஒவ்வொரு காராபூந்தியாகச் சாப்பிட்டுக்கொண்டு ரேடியோ கேட்போம். சில சமயம் முதலாளி படக்கென்று ரேடியோவை மூடிவிடுவார். இவ்வளவு ஸங்கடம் ஏன்! பொதுரேடியோக்களுக்குப் போகலாமே! என்றால் எங்கள் ஊர்பார்க்கில்உள்ள ரேடியோவில் மாலை தமிழ்ச்செய்திகள் முடிந்து 7-44 மணிக்கு "அடுத்த நிகழ்ச்சியைப்பற்றின அறிவிப்பு உடனே தொடரும்" என்று கூறினதும் ரேடியோவை மூடிவிட்டு எமகிங்கரர்போல் இருவர் வந்து அந்தக் குழாய்களைக் கழற்றிவிடுவார்கள்ரேடியோகருவியில்உள்ள சாமான்களின் விலையைக் கணக்குப்பார்த்தால் வெகு சொற்பமாகத்தான் இருக்கும். அவ்வுற்பத்தி தொழில் நம்நாட்டில்உயர்த்துவதற்கு ஈசன் அருள்வாராக!



[கவிச் சக்கரவர்த்தி பாரதியார் இயற்றிய இப்பாடல் நாதநாமக்கிரியா ராகத்தில் ஆனந்தக் களிப்பு மெட்டில் அமைந்தது. கவி, விரும்பிய முறையிலேயே பாரதி வாரத்தில் வெளிவரும் இவ்விதழில் அப்பாடலை ஸ்வரப்படுத்தி வெளியிடுகிறோம்.]

பல்லவி

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம். (வந்தே

சரணங்கள்

1. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே, (வந்தே)

2, ஈனப் பறையர்களேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ ?
சீனத்த ராய்விடு வாரோ ?—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப்பாரோ ? (வந்தே)

3. ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி ?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ ? (வந்தே)

4. ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும் ? (வந்தே)

5. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொதுவாகும்;
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம். (வந்தே)

6. புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி. (வந்தே)

ராகம் : நாதநாமக்ரிய தாளம் : ஆதி.

பல்லவி

1\. : ஸரி மா ; மக பம கரி ரீ | ஸா : ஸா : | ; ; ஸா ஸா ||
வ . ந்தே மா . . த . ர மென் போம் எ ங் க ள்

; நி ஸரீ கரீ மா : மா மா | மகபம மகரீ | நீரீ கமகரி ||
. மா . னில த்தா யை வ ண . . . ங்கு . து மென். போம் . . .

2\. ஸநி ஸரீ பத பா, ம மக பம கரி ரீ | ஸநிகரி, ரிஸஸா | ; ; ஸா,க ரிஸஸா ||
. . வ . ந்தே . . . மா . . . த . ர மென் . . போம் . . எங் . க ள் . .

, நி ஸரீ கரிப ம்மா, மா மா | மகபம மகரீ | ரிநிரீ பமகரி ||
. மா. னில . த்தா . யை வ ண . . . ங்கு . து மென் . . போம். . .

ஸநி = வந்தேமாதரமென்போம். ||

சரணம் 1

3\. ; ஸரீ மமா மக பம க ரி ரீ | ஸா ; ஸா : | ; ; ஸா ஸா ||
ஜா . தி ம த . . . ங்க . ளைப் பா ரோம் இ ந் த

, நி ஸரீ கரீ மா ; மா மா | மக பம மகரீ | ரிநிரீ பமகா ||
. ஜன் . ம மி த்தே ச த்தி லெய் . . தி . ன ரா . . யின் . .

1\. ; மப மக மா பா ; பா பம | பா, த பா : த மபா, | ; ; ; ; ||
வே . தி . ய ரா யி னும் . ஒ . . . ன்றே.

2\. மத பா மக மா ஷி ஷி | ஷி ஷி | ; ; தநி தப ||
வே. . தி . ய ” ” ” ” . . . .

3\. ம ம மத பா மக மா ஷி ஷி | ஷி ஷி | மா பா தநி தப ||
. . வே. . தி ய ” ” ” ” . . . . . .

4\. ம ம மத பா மக மா ஷி ஷி | ஷி ஷி | ; ; பா பா ||
. . . வே. . தி . ய ” ” ” ” அ ன் றி

தம மநி தா பா பா த நித ப பம | ம மாக மா,ப மா, ப | மகரீ பம கரி ||
. . வே. று கு ல . . த்தி. ன . ரா . . யி . னு . மொ . . ன்றே. . .

ஸநி = வந்தேமாதரமென்போம் ||

ஜாதிமதங்களைப் பாரோம் என்னும் அடியில் பல்லவியைப்போல்
மற்ற ஸங்கதிகளைப்பாடிக்கொண்டு மேலே பாடவேண்டும்.

மத்யம ச்ருதி வைத்துக்கொண்டு பாடினல் ரக்தியாக இருக்கும்.

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

18

இரண்டு வீர பக்தர்கள்

★

பி. ஸ்ரீ.

சோழ மன்னர்களுக்கு ஐந்து தலைநகரங்கள்: காவிரிப்பூம் பட்டினம், உறையூர், திருவாரூர், சேய்ஞலூர், கருவூர். இவற்றில் கருவூர் கொங்கு நாட்டில் உள்ளது. இது மிகப்பழமையான ஊர் என்றும், இயற்கைவளங் குன்றுமலை அழகாக நிர்மாணிக்கப்பெற்றிருந்த நகரமன்றும், அழகுப்பிரியர்களான ரஸிகர்கள் நிறைந்த ஊர் என்றும் சேக்கிழார் கூறுவர்:

தொன்னெடுங் கருவூர் என்னும்
சுடர்மணி வீதி மூதூர்.

[தொல் நெடு—மிகப் பழமை வாய்ந்த.]

தூமணி வாயில் சூழும்,
சோலையில் வாசம் சூழும்;
தேமலர் அளகம் சூழும்,
சிலமதி தெருவில் சூழும்.

[தூமணி-உயர்ந்த இரத்தினங்கள். வாசம் நறுமணம். தேமலர்—இனிய மலர்கள். அளகம்—கூந்தலில் சிலமதி—(மாதர் முகங்களாகிய) சில சந்திரர்கள்.]

இக்கருவூரின் வளம் சேக்கிழாரின் உள்ளத்தைப் பெரிதும் வசீகரித்திருப்பது போலக் காண்கிறது. யானைகளை நீர்த்துறையில் குளிப்பாட்டும் அழகும், ஊரை அடுத்துள்ள காட்டுப்புறத்தில் உல்லாசமாகத் தோகை விரித்து ஆடும் அழகு, இரத்தின கசிதமான நடன மேடைகளில் பயில்போன்ற மாதர்கள் (19-முதல் 25-வயது வரையுள்ள பருவத்தினர்) ஆட, அவர்களுடைய பூச்சூடிய கூந்தல்களைச் சுற்றி வண்டுகள் ஆடும் அழகும் வீதியில் ஒளிகள் ஆடக் கொடிகள் மேடையில் ஆடும் அழகும் தேசமெங்கும் யாத்திரிகர்கள் கொண்டாடத்தக்க அழகுகளாயிருந்தனவாம்.

கடகரி துறையில் ஆடும்;
களிமயில் புறவில் ஆடும்;
அடர்மணி அரங்கில் ஆடும்
அரிவையர் குழல் வண்[டு)
ஆடும்:
படரொளி மருகில் ஆடும்.
பயில்கொடி கதிர் மீ(து)
ஆடும்;
தடநெடும் புவிகொண் டாடும்
தனிநகர் வள்மை ஈதால்.

[கடகரி-மதயானைகள். புறவில்—முல்லை நிலத்தில்; காட்டுப்புறத்தில். அரிவையர்-19 முதல் 25 வயதுவரையிலுள்ள பெண்கள். குழல்—கூந்தல். மருகில்-வீதியில். கதிர்மீது ஆடும்—சூரியனுடைய கதிர்கள்மீது ஆடும். தடநெடும் புவி—விசாலமான உலகம். தனி நகர்—ஒப்பற்ற நகரம். ஈதால்—இது.]

இவ்வள நகரின் இதயம் போலிருந்த சிவாலயத்திற்கு ஆனிலை என்று பெயர். இப்பெருமானின் அருட்பெருந் தொண்டர்களில் ஒருவர் எறிபத்தர் என்று பெயர் பெற்றிருந்தார். இவர் சிவனடியாராயினும் மழுவுங் கையுமாகவே இருப்பாராம். அடியார்களுக்குத் தீங்கிழைப்பவர்களை எறிந்து வீழ்த்தவே மழுப்படை தாங்கியிருந்தார். மழுவை எறிகின்ற பக்தர் எறிபத்தர். விநோதமாகத் தோன்றுகிறதல்லவா? இப்படி ஹிம்ஸை நெறியிலும் தீங்கிழைத்தவர்களைத் திருத்திப் பணி கொண்டாராம்.

இவர் காலத்தில் சிவகாமி ஆண்டார் என்ற ஒரு பெரியவர் நாள்தோறும் பூகொய்து மாலை கட்டி ஆனிலை அடிகளுக்குச் சாத்தி வந்தார். ஒரு நாள் வழக்கம்போல் பூக்கூடையை நிறைத்து அதை ஒரு தண்டில் தொங்கிவிட்டுக் கொண்டு கோயிலை நோக்கி வந்தார். வரும்போது, அவ்வூர்

அரசரான புகழ்ச் சோழரின் பட்டவர்த்தனயானை காவேரியில் முழுகி அலங்கரிக்கப்பெற்று அவ்வழியே வந்தது. அது தனக்கு முன்னே சிவகாமி ஆண்டாரைக்கண்டதும் தொடர்ந்து ஓடி அவர் தாங்கிய தண்டில் தொங்கிய பூங்கூடையைப்பற்றிப் பறித்துப் பூக்களைச் சிதறிவிட்டது.

அன்று மகாநவமிக்கு முதல் நாள். யானையின் அடாத செயல் கண்ட பாகர்கள் அதை வேகமாய்ச் செலுத்திக்கொண்டுபோனார்கள். சிவகாமி ஆண்டார் பதை பதைத்து யானையைத் தண்டினால் அடிக்க ஓடினார். யானையின் மகாகதி எங்கே, சிவகாமி ஆண்டாரின் கிழ நடை எங்கே? கால் தவறிக் கீழே விழுந்தார். அவர் 'சிவதா, சிவதா' என்று அடிக்கடி உச்சரிப்பது வழக்கம். 'சிவதா!' என்றால் 'நன்மையைச் செய்கிறவனே!' என்று பொருள். கீழே விழுந்ததும் 'சிவதா! சிவதா!' என்று ஓலமிட்டார்.

அப்போது எதிரே வந்த எறிபத்தர் அழன்று பொங்கி மழுவுங் கையுமாக யானையைத் துரத்திக்கொண்டு போனார். யானையைக் கிட்டியதும் அதன் மீது பாய்ந்தார். எறிபத்தரே வெற்றி பெற்றார். 'பட்டவர்த்தனம் கொலையுண்டது' என்ற செய்தி புகழ்ச் சோழர் செவியில் விழுந்தது. சோழர் குதிரைமீது கோபக் கனலே சவாரி செய்வதுபோல வந்தார். ஆனால் யானையைக் கொன்றவர் சிவபக்தரான எறிபத்தர் என்று தெரிந்ததும் அரசருக்கு யானையைப் பறிகொடுத்த வருத்தமும் கோபமும் பறந்து விட்டனவாம். 'இந்த அடியவருக்கு யானையால் அபாயம் ஏற்படவில்லையே, நல்லகாலம்!' என்று ஒருவாறு திருப்தி ஏற்பட்டதாம்.

பிறகு யானையால் நேர்ந்த பிழை தெரிந்து, எறி பத்தரை வணங்கிச் சோழர் பெருமான், 'இந்த யானையின் பிழைக்காக என்னையும் கொன்றுவிடுங்கள். அடிகளின் மங்கல மழுவால் கொல்லப்படும் தகுதி அடியேனுக்கு இல்லை! இதோ இந்த என் உடைவாளால் அடியேனைக் கொன்றருள்க' என்று எறிபத்தரை வணங்கி நின்று உடைவாளை நீட்டினார் அரசர்:

'மங்கல மழுவால் கொல்கை
  வழங்கும் அன்(று) இதுவாம்'
    [என்று
செங்கையால் உடைவாள்
    [வாங்கிக்
  கொடுத்தனர் தீர்வு நேர்வார்.

[இதுவாம்—இது ஆம்—இந்த உடைவாள் தக்கது. தீர்வு–கழிவு அல்லது பிராயச்சித்தம். நேர்வார்–விரும்புகிறவராகிய அரசர்]

அரசர் நீட்டிய உடைவாள் மிகக் கூர்மையாகத் தழலும் சுடரும் வீசுவதுபோல் ஜொலித்தது. இப்போது எறிபத்தரின் உணர்ச்சியை என்னென்பது? அந்த உடைவாளை எறிபத்தர் வாங்கிக் கொண்டாரா? 'அப்படியே உருகிப் போனார் எறிபத்தர். வாளை எப்படி வாங்குவார்? தம்மைப் புகழ்ச்சோழர் அறிந்து கொண்டதுபோல் அவரையும் இவர் தெரிந்துகொண்டார்' என்று தான் கதையை முடிக்கக் கூடும். சேக்கிழார் என்ன சொல்கிறார் பாருங்கள்:

வெந்தழற் சுடர்வாள் நீட்டும்
  வேந்தனை நோக்கிக் 'கெட்
    டேன்!
அந்தமில் புகழான் அன்புக்கு
  அளவின்மை கண்டேன்' என்று
தந்தவாள் வாங்க மாட்டார்;
  தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற்(று) அஞ்சி
  வாங்கினார் தீங்கு தீர்ப்பார்.

[கெட்டேன்–இங்கு ஐயோ. துறக்கும்–உயிர் வாங்கிவிடுவார். தீங்கு–தம்மைத்தாமே அரசர் உடைவாளால் உயிர் போக்கும் தீமை]

புகழ்ச்சோழரின் அளவற்ற அன்பு குறித்து ஆச்சர்யம் அடைந்த எறிபக்தர் முதல்முதல் அந்த உடைவாளை வாங்கிக் கொள்ளவில்லை. சிறிது நேரம் திகைத்து நின்றார். பிறகு திடீரென்று அந்த உடைவாளை வாங்

க்கொண்டாராம். 'வாள் அன்பர் கையிலிருப்பது ஆபத்து! தற்கொலை செய்து கொள்வார்' என்று அஞ்சி வாங்கிக் கொண்டார்.

புகழ்ச்சோழருக்கோ ஒரே மகிழ்ச்சி.

ஈங்(கு)னை வாளி னால்கொன்(று)
என்பிழை தீர்க்க வேண்டி
ஓங்கிய உதவி செய்யப்
பெற்றனன் இவர்பால்

என்றே மகிழ்ந்து போனாராம்.

இப்போது எறிபத்தரின் மனநிலையை இன்னும்நன்றாகப்பார்க்கலாம். 'பட்டத்து யானையோடு யானைப்பாகரையும் நான் கொன்றிருந்தும், இவர் தமது உடைவாளைத் தந்து தம்மையும் கொல்லச் சொல்லுகிறாரே! எப்பேர்ப்பட்ட அன்பருக்குத் தீங்கு நினைத்தேன்! இப்போதே என் உயிரை முடித்துக்கொள்வேன் என்று' உறுதிகொண்டு அந்த வாளால் தம்முடைய கழுத்தை அறுக்கத் தொடங்கினார். புகழ்ச் சோழர் பளிச்சென்று கையையும் வாளையும் பிடித்துத் தடுத்துவிட்டார்.

எறிபத்தர் புகழ்ச்சோழர் காலில் விழுந்து வணங்கினார். புகழ்ச்சோழரும் வாளை வீசி யெறிந்து எறிபத்தர் அடிகளில் விழுந்தார்.

எறிபத்த நாயனாரைப்போல் புகழ்ச்சோழரையும் நாயனாராகப் போற்றுகிறது சைவ உலகம். இவர் சோழர்களில் ஒரு பேரரசராக விளங்கினாரென்றும், ஒரு போரில் அடியார் ஒருவர் கொல்லப்பட்ட தாகக்கருதி அக்கினிப் பிரவேசம் செய்தாரென்றும் பெரியபுராணம் தெரிவிக்கிறது.

புதிய கவர்னர் பிரமாணத்தில் கையொப்பமிடுகிறார்.

சென்னையின் புதிய கவர்னர் சென்ற 7-ந்தேதியன்று சென்னை ராஜாஜி ஹாலில் தமது பதவியை ஏற்றுக்கொண்டு பிரமாணத்தில் கையொப்பமிடுகையில் எடுத்த படம்.

மாதர் மகா சபை

'குங்குமம்'

'அதோ அவளும் வந்துவிட்டாள்' என்று சொல்லிவிட்டு, 'வா, வா இன்னும் இரண்டு நிமிஷம் கழித்து வந்திருந்தால் காலிதான். பரவாயில்லை. எங்கேயோ ஒரு மூலையில் அதிர்ஷ்டம் இருந்துகொண்டுதான் இருக்கிறது' என்று அங்கு வந்த சரோஜாவை சமையல் அறையிலிருந்து கூப்பிட்டாள் ருக்கு.

'எல்லாம் உனக்கு ரொம்பவும் பிடித்த வஸ்துதான். இன்று ருக்கு அகத்தில் 'இட்டிலி பார்ட்டி' என்றாள் சாந்தா.

'என்ன யோசனை? பானுவும் இருக்கிறாள் வரலாம், வா' என்றாள் விமலா.

'நிஜமாகத்தான், என்னடி யோசனை செய்கிறாய்? நாங்கள் உங்கள் வீட்டுக்குப் பங்குக்கு வந்துவிடப் போகிறோம் என்றா? வா. அதோ மேடைமேல் இரண்டு இட்டிலி இருக்கிறது. எடுத்து வைத்துக்கொண்டு உட்காரு. சட்னி வேண்டுமானால் அதோ ஈயக் கிண்ணியில் இருக்கிறது. மிளகாய்ப்பொடி வேண்டுமானால் அதோ அம்மியிலேயே இருக்கிறது. எதுவேண்டுமோ போட்டுக்கொள' என்றாள் ருக்கு.

'என்றைக்கு என்ன தெரியுமோலியோ' என்றாள் கூடத்தில் இருந்துகொண்டே சரோஜா.

'என்ன என்றைக்கு?' என்று எல்லோரும் ஒன்றும் புரியாதவர்கள்போல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

'ஏகாதசி, மறந்து போய்விட்டதா?' என்றாள் சரோஜா.

'இருக்கட்டுமே. என்ன அதற்கு?' என்றாள் பானு.

'சரிதான்போ! ஏகாதசி, உபவாஸம் என்பதே மறந்துபோய்விட்டதா?' என்றாள் சரோஜா.

'அது எத்தனை நாளாய்?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் விமலா.

'அதான் வயிறு அப்பளாம் மாதிரி முதுகு எலும்புடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது! பாவம், எப்படித்தான் நடந்து வந்தாயோ? விழுந்துவிடப் போகிறாள்! போய் யாராவது பிடித்துக்கொள்ளுங்களடி' என்றாள் சாந்தா சிரித்துக்கொண்டே.

'யாரை ஏமாற்றுவதற்கு இதெல்லாம்? இப்படி எத்தனை பேர் கிளம்பியிருக்கிறீர்கள்?' என்றாள் விமலா.

'நான் ஒன்று. எங்கள் பக்கத்து அகத்துமாமி, மாமா ரெண்டுபேர், ஆகமொத்தம் மூன்றுபேர் எனக்குத்தெரிந்து. இன்னும் இது மாதிரி எத்தனை பேர் இருக்கிறார்களோ' என்றாள் சரோஜா சிரித்துக்கொண்டே.

'இது கிடக்கட்டும். நிஜமாகவே உபவாஸமா என்னடி?' என்றாள் பானு.

'இதில் பொய் வேறா?' என்றாள் சரோஜா.

'உன் முகத்தைப் பார்த்தால் உபவாஸத்தின் சோர்வையே காணோமே, ஏன் இப்படித் திடீரென்று ஒரு சங்கல்பம்?' என்றாள் ருக்கு.

'என்ன செய்கிறது! சமய சந்தர்ப்பம் அந்தமாதிரி இருக்கிறது' என்றாள் சரோஜா.

'நிஜமாகவா நீ உபவாஸம்?' என்று சந்தேகம் கலந்த தொனியில் கேட்டாள் விமலா.

'பக்கத்தகத்து மாமாவும். மாமியும் இருக்கும் உபவாஸம் நிஜமானால் என்னுடைய உபவாஸமும் நிஜம்தான்' என்றாள் சரோஜா.

'போடி, புதிர் போடாமல் சொல்லமாட்டாயோ?' என்றாள் சாந்தா.

'புதிர் என்ன இதில். பக்கத்தகத்து மாமாவும், மாமியும் ஏகாதசிக்கு 'உபவாஸம்' இருக்கிறார்கள். நாலு பேர் கௌரவிக்கிறார்கள். அதனால் நானும் இருந்து பார்க்கிறேன்' என்றாள் சரோஜா.

'நன்றாக இருக்கிறது. போயும் போயும் போட்டிக்கு இடம் அகப்பட்டதே அவர்கள் பரம்பரை வைதிகர்கள். மகத்ஸந்ததி. உள்ளூர உபவாஸம் இருப்பவர்கள். உன்னால் அப்படியெல்லாம் முடியுமா? இரகசியமாக நன்றாகச் சாப்பிட்டு விட்டு வெளிக்கு உபவாஸம் என்று சொல்லிக்கொள்ளலாம்' என்றாள் பானு.

'அங்குமாத்திரம் என்ன வாழ்ந்தது. எல்லாம் இதே கூத்துதான்' என்றாள் சரோஜா.

'அதென்னடி அது அப்படிச் சொல்லிவிட்டாய்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் பானு.

'நான்கூட முதலில் அப்படித்தான் நினைத்து ஏமாந்து விட்டேன். பிறகல்லவோ தெரிந்தது அந்த ஏமாற்று வித்தையெல்லாம். நாள் தவறினாலும் தவறும், பக்கத்தாத்து மாமா காபி குடிப்பவர்களைப் பற்றி ஒரு அத்யாயம் திட்டுவது மாத்திரம் நிற்காது. இந்த ஜனங்கள் காப்பிக் குடியை என்றைக்கு நிறுத்துகிறார்களோ அன்றுதான் நம் தேசம் க்ஷேமமடையும் என்றுதான் காபி குடிப்பதே இல்லை போல் உலகத்தைக் கண்டிக்க ஆரம்பித்துவிடுவார்' என்று சரோஜா சொல்லி முடிப்பதற்குள் 'சே! அவர் குடிக்கமாட்டார்' என்றாள் பானு.

'பைத்தியம்தான் உனக்கு. ஒருநாள் காலை ஏதோ வேலையாய்த் திடீரென்று சப்தம் போடாமல் அவர்கள் வீட்டுக்குப் போனேன். மாமாவும் மாமியும் அடுப்பங்கரையில் உட்கார்ந்துகொண்டு காபி குடித்துக்கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்துவிட்டார்கள். இன்னது செய்வதென்று தோன்றவில்லை அவர்களுக்கு. உடனே மாமி, 'நேற்றே சாப்பிட்டிருந்தால் தலைவலி இவ்வளவு 'முற்றி' இருக்காது. அதற்கென்ன செய்யலாம்! டாக்டர் கொடுக்கும் மருந்தை சாப்பிடவில்லையோ? அந்த மாதிரி எண்ணிக்கொள்கிறது. தலைவலிக்குக் கைகண்ட ஔஷதம் இது எனக்கு. இன்று லேசாகத் தலைவலி ஆரம்பித்திருக்கிறது எனக்கு. இதோ ஒரு டம்ளர் குடித்தால் உடனே பறந்து விடப் போகிறது. பரவாயில்லை. சாப்பிடுங்கள்' என்றாள் மாமி. மாமி காப்பிக் கொட்டை வாங்கும்போதெல்லாம் யாராவது சிநேகிதர்கள், பந்துக்கள வந்தால் அவர்களுக்காக என்று சொல்லுவதன் ரகசியம் அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. இதே மாதிரிதான் ஏகாதசி உபவாஸ மகிமையும். ஒருநாள் பிற்பகல் அப்பா திடீரென்று அவர்கள் அகத்தினுள் என்மாதிரிதான் குரல் கொடுக்காமல் போய்விட்டார். அன்று ஏகாதசி. மாமா அடுப்பங்கரையில் இட்டிலி பலகாரம் செய்துகொண்டிருக்கிறார். அப்பாவைப் பார்த்துவிட்டுத் திருதிருவென்று விழிக்கிறார். இன்னது சொல்வதென்று தெரியாமல் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, 'எனக்கு இந்த மாதிரி இருந்தததே கிடையாது அதென்னமோ தெரியவில்லை. திடீரென்று தலையைச் சுற்ற ஆரம்பித்துவிட்டது. கைகாலகளெல்லாம் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்துவிட்டது. சரி, வந்தது வரட்டும், பிராணனுக்குமிஞ்சிதான் எல்லாம் என்று பலகாரம் சாப்பிடுகிறேன், என்ன

''.........இன்னது செய்வது என்று தோன்றாமல்............''

செய்கிறது நம்மையும் மீறிப்போய்விட்டால்?' என்றாராம். இல்லையா பின்னே! நம்மால் முடிந்தவரையில் தான் பார்க்கலாம். அதற்கும் மீறி விட்டால் யார்தான் என்ன செய்யமுடியும்? அதுவும் இந்தக் கலி காலத்தில் அவ்வளவு பார்த்து முடியுமா?' என்று பட்டதும் படாததுமாக அப்பாவும் ஏண்டா அப்பா 'பூஜை வேளையில் கரடி புகுந்த மாதிரி' அங்கேபோனோம் என்று ஏதோ சமாதானம் சொல்லிவிட்டு வந்துவிட்டாராம். எதற்காகச் சொல்லுகிறேனென்றால் அவர்கள் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் நாம் என்ன செய்கிறோமோ அதையே ரகசியமாய்ச் செய்துவிட்டு 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா' என்ற மாதிரியில் நம்மைத் தூஷிக்கக் கிளம்பிவிடுகிறார்கள். அத்துடன் அவர்களை உலகம் ஆஸ்திகர்கள், வைதிகர்கள் அது இது என்று பிரமாதமாகக் கொண்டாடுகிறது. அதையே நாம், பொய், 'பூனை சுருட்டு' இல்லாமல் பகிரங்கமாய்ச் செய்தால் நாஸ்திகர்கள் ஆசார ஹீனர்கள், அது இது என்று உலகம் நம்மைத் தூஷித்துவிட்டுச் சாதாரண ரீதியில் நோக்குகிறது. அதனால்தான் நாமும் கொஞ்சம் அந்த முறையைக் கையாண்டு பார்ப்போமே யென்று கொஞ்ச நாட்களாய் இந்தமாதிரி இருந்து வருகிறேன். அதற்குப் பலன் இல்லாமலும் இல்லை. அண்டை அயலில் 'பரவாயில்லை. ரொம்ப நல்ல பெண், ஆசார அனுஷ்டானம், தெய்வபக்தி, அதெல்லாம் இந்த வயசில் ஏற்படுகிறது அதிசயந்தான்' என்று என்னைப் பற்றிய வார்த்தைகள் என் காதுகளில் விழ ஆரம்பித்திருக்கின்றன' என்றாள் சரோஜா.

'அதுமாத்திரம் வாஸ்தவந்தான். எங்கள் பக்கத்தகத்தில் ஒருவர் இப்படித்தான்—உபவாஸம் கிபவாஸமெல்லாம் கிடையாது-ஹோட்டலில் சாப்பிடுகிறதே கிடையாது என்று அதை ஒரு பெருமையாக நாலு பேரிடம் 'தமுக்கடித்துக்' கொண்டிருந்தார். எங்களகத்துக்காரர் ஒரு நாள் ஹோட்டலுக்குப் போயிருந்தபோது, அந்தப் பேர்வழி அங்கே உட்கார்ந்து 'ஜமாய்த்துவிட்டு' அப்பொழுதுதான் சர்வர் பில்லை டேபில் மேல் வைத்துவிட்டுச் சென்றானாம். அப்பாவைப் பார்த்தவுடனே அவர் உடம்பு பெட்டிப்பாம்பாய் ஒடுங்கிவிட்டதாம். அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே 'வெய்யில் இப்படிக் கடுமையாய் இருக்கிறதே, இப்பொழுது வேண்டாம், சாயங்காலம் பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் முதலில் யோசனை செய்தேன். என்னமோ கிளம்பிவிட்டேன். பஸ்ஸை விட்டு இறங்கி 10 கெஜ தூரம் நடந்திருப்பேன். பாதரக்ஷை, குடை இல்லாமல் வந்துவிட்டேன். கால் கொப்பளித்துவிட்டது. ஒரே மயக்கமாய் போய்விட்டது வீடு போகிறவரையில் உயிர் நிலைக்காதுபோலிருந்தது. காப்பிக்குப் பரவாயில்லையென்று இங்கேவந்தேன்' என்றாராம். ஒரு கப் காப்பி இரண்டணா பில்லில் எட்டரையணா என்று போட்டிருந்ததாம். இதிலேயே தெரியவில்லையா அவருடைய வண்டவாளம்! எதற்கு இந்த வீண் வேஷமெல்லாம். 'ப்ளெய்னா'க இருந்தால் யார் அடிக்கிறார்கள்?' என்று மனதில்நினைத்துக்கொண்டு அதற்கென்ன பரவாயில்லை என்று பதில் சொன்னாராம். இந்த மாதிரி எத்தனையோ இருக்கிறதுகள் என்றாள் பானு.

'தெரிந்ததா இப்பொழுது என்னுடைய உபவாஸ மகிமை?' என்றாள் சரோஜா.

'அப்படியானால் அகத்தில் 'மூக்குப்பிடிக்க' சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறாய் என்று சொல்' என்றாள் வசந்தா.

'உஸ் உரக்கச்சொல்லாதே. எங்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் காதில் விழப் போகிறது. அதிகமில்லை, ஆறே ஆறு இட்லிதான். ஆனால் உபவாஸம் என்றாள் சரோஜா.

எல்லோரும் கொல் என்று சிரித்துவிட்டார்கள்.

இதுவரையில் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த ருக்குவின் மாமியார் தொண்டையைக் கனைத்துக்கொண்டு சொல்ல ஆரம்பித்தாள். போடி பைத்தியமே, அவ்வளவு கேவலமாக நினைத்து விடக்கூடாது. உலகத்தில் சில கட்டுப்பாடுகள், ஒழுங்கு இருந்துதான் ஆக வேண்டும். அவர்களால் அனுஷ்டிக்க முடியவில்லையே

தவிர அவர்கள் கொண்டுள்ள விரதம் என்னமோ உயர்ந்த விரதம் தான். எங்கள் பெரிய மாமியார் ஒருவர் இருந்தார். எங்காவது ரயில் பிரயாணம்செய்துவிட்டு வந்தால் ஸ்னானம்செய்ய வேண்டுமென்று சொல்வார்கள். பாவம் தள்ளாத வயது. மழை காலமாக இருக்கும். குளிர் வெடவெட வென்று நடுக்கி எடுக்கும். சில சமயங்களில் ராத்திரி வேளையாகவும் இருந்து விடும். 'பரவாயில்லை, சாப்பிடுங்கள். காலையில் ஸ்னானம் செய்து விடலாம்' என்றால், 'நன்றாக இருக்கிறது. ரயில் தீட்டு' என்று சொல்லிவிட்டு ஸ்னான அறைக்குள் போய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டு விடுவார். ஒரு அண்டா ஜலமும் ஆகிவிடும். ஆனால் ஒரு பொட்டுக் கூட உடம்பில் படாது. எல்லாவற்றையும் மொண்டுமொண்டு மேலே கொட்டிக்கொள்ளுகிற பாவனையாய்க் கீழே கொட்டி விடுவார். உடம்பில் ஜலம் கொட்டிக்கொண்டதால் குளிர் நடுக்குகிறமாதிரி உதட்டை 'வவ்வு' கொட்டிக்கொண்டு உள்ளே வந்து சேருவார். ஏதோ அந்த அளவுக்காவது சந்தோஷப்படவேண்டியது தான். அவ்வளவென்ன, சர்க்கார்அதிகாரிகளில்எத்தனையோ பேர் லஞ்சம் வாங்குவதாய்ச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்காக அவர்கள் பொது ஜனங்கள் அக்கிரமம் செய்தால் அதைத் தண்டிக்காமல் இருக்கமுடியுமோ? ஆகவே இதன் தத்துவம் என்னவென்றால் அவர்கள் அனுஷ்டிக்கா விட்டாலும், அவர்களுடைய உபதேசம் உலகத்துக்கு உபயோகப்படலாமல்லவா? அதை கேட்டு அனுஷ்டிக்கிறவர்கள் அனுஷ்டிக்கட்டுமே. நல்ல எண்ணம் இருப்பதே நல்லதல்லவா?

ஆனால் நீங்கள் சொல்வீர்கள். பொய்யும் 'புனை சுருட்டையும்' விட 'ப்ளெயினாக' இருந்துவிடுகிறது மேல் என்று. இருந்தாலும் எல்லாம் அப்படியே இருந்துவிட முடியுமா? ராஜ தந்திரத்தின் ரகசியமே இதுதானே! இல்லாவிட்டால் உலகத்தின் போக்கே வேறு தினுசில் போய்விடும்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அப்படியானால் இந்த இரண்டு இட்டிலிக்கும் தலைவலிக்கிறது என்று சொல்லுங்கள்' என்று சொல்லிக்கொண்டே சரோஜாவும் சமையலறைக்குச் சென்று 'இட்டிலி பார்ட்டியில்' கலந்துகொண்டாள்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

உங்கள் கால பலன் — ராசி

மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

இந்த மாதம் மேஷராசிக்காரர்களுக்குச் சற்று அபிவிருத்திகரமானதுதான். சம்பாத்தியத்தாலோ அல்லது கடன் வாங்குவதாலோ செல்வ நிலைமை அபிவிருத்தி அடையும். குடும்ப சுகத்தை நாடி முன்னைவிட அதிகமாக முயற்சி செய்யும்படியிருக்கும். உறவினர்களாலும், குழந்தைகளாலும் கவலைகளேற்படும். இவர்களில் சிலரிடம் உறவு சௌஜன்யமாயிராது. படிப்பாளிகளாகவும், பண்பாடு உடையவர்களாயுமிருப்பின் அவர்கள் படிப்பதிலும், எழுதுவதிலும் காலத்தைச் செலவுசெய்ய நேரும். காரியாலய அலுவல்களில் கவனம் திரும்பும். இங்கு வேலைப் பளு அதிகமாயிருக்கும். இந்த மாதத்தில் நண்பர்களிடம் நம்பிக்கை வைப்பதில் பயனில்லை. பழைய சிநேகிதர்கள் இந்த ராசிக்காரர்களை அணுகுவதால் செலவு அதிகமாகும். 7-வது இடத்தில் லக்னாதிபதியிருப்பதால் எந்தப் புதிய முயற்சியிலும் வெற்றி கிட்டும். ஊழியர்களாயிருந்தால் செய்யும் தொழிலில் மாறுதலேற்படலாம். செய்யும் வேலை மன உல்லாஸத்தைத் தருவதாகவிருக்கும். ரஸிகத்தன்மையைக் குறிப்பிடும் சுக்கிரன் கேந்திரத்திலிருப்பதாலும், குரு சுக்கிரனைப் பார்ப்பதாலும், கலைப் பக்குவத்தோடு, ரஸானுபவத்தில் மனம் ஈடுபடும். இந்த மாதம் இந்த ராசிக்காரர்களுக்கு ஒரு பிரயாணமும் நேரலாம். சென்ற மாதத்தைவிட வியாபாரிகளாயிருப்பவர்களுக்கு இந்த மாதம் அனுகூலமானதுதான். இதுவரை மந்தமாகவிருந்த வியாபாரம், அதற்கான உதவி உரிய காலத்தில் கிட்டுமாதலால் சுலபமாக நடைபெற்று வரும். ஆரோக்கியத்தைப் பொறுத்துள்ள இடத்தில் மூன்று கிரஹங்கள் இருப்பதால் பொதுவாக தேக சுகம் திருப்திகரமாயிராது. உள்ளடங்கியிருந்த நோய் வெளியே தலைகாட்டும்.

ஸெப்டம்பர் 9, 23, 29, 30. அக்டோபர் 3, 4, 7, 8, 11, 12 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரமானவை.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

விருஷப ராசிக்காரர்களுக்கு இம்மாதம் முக்கியமாக விளங்கும் பிரச்னைகள் உத்தியோகம், பணம் வீடு அல்லது சொத்து இவற்றைப் பற்றியதாகவே இருக்கும். உத்தியோகத்தில் திடீரென்று மாறுதலேற்படலாம் இதனால் வருமானம் அதிகரிக்கும். நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் பொறுப்புடனும் அந்தஸ்து உண்டாகும். இம்மாத முதற்பகுதியில் நேரக்கூடிய விஷயமிது. உத்தியோக நிமித்தமாகவே ஒரு பிரயாணமும் சித்திக்கலாம். மனைவியின் தேக சுகமின்மை இருக்குமென்றாலும் குடும்பத்தில் சந்தோஷம் உண்டு. குழந்தைகளாலும் குடும்ப சுகம் பெருகும். நிலம், வீடு, அல்லது வாகனங்கள் இவற்றில் ஏதாவது ஒன்றில் பணம் போட நேரலாம். இம்மாதக் கடைசி வாரத்திலிருந்து மனைவியின் தேக சுகம் அபிவிருத்தியடையும். வியாபாரிகளாயின் இம்மாதக் கடைசி வாரத்தின் முதல் பகுதியில் திடீரென்று லாபமடைய இடமுண்டு.

முதலாளிகளானால் தங்கள் சிப்பந்திகளை மாற்றி வேறு சிப்பந்திகளை வைத்துக்கொள்ளும்படியான அவசியத்தை உணர்வார்கள். அக்டோபர் 8-ந் தேதி வாக்கிலோ அல்லது அதற்கு முன்பாகவோ தேகாரோக்கியம் சுகமாயிராது. செலவு அதிகப்பட்டு எதிரிகளால் கவலைகள் உண்டாகக்கூடுமென்று காண்கிறது. உத்தியோகம், அல்லது வியாபாரம் சீரான நிலையில் நடந்து வரும். வியாபாரிகளானால் ஹேஷ்யம் செய்யும்படியிருக்கும். தற்காலிக உத்தியோகத்திலிருப்பவர்களானால் இம்மாதம் அவர்கள் தாங்கி வரும் பதவி காயமாகும். இரண்டாம் பகுதியில் கூட்டாளி முறையில் மாறுதலேற்படும். கூட்டாளி, பணத்தில் வலுவுள்ளவராகயிருப்பார். இந்த ராசியில் சிலருக்குக் கடுமையான வயிற்று வலி ஏற்படும். இது சிறிது காலம் வரையில். கிரஹங்களின் நிலைமை இம்மாதம் பலவாருகயிருப்பினும்

1948-ம் ஸ்ரீ ஸெப்டம்பர்மீ 17உ முதல் அக்டோபர்மீ 16உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள்கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்து கொள்வதற்குதவியாக நட்சத்திரங்களும், பாதங்களும் பக்கத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

முக்கியமாக அனுகூலமாகவே இருக்கும்.

ஸெப்டம்பர் 19. 21, 23, 29. 30, அக்டோபர் 4, 6, 8, 13 தேதிகள் இவர்களுக்கு உதவிகரமானவை.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

மிதுனராசிக்காரர்களுக்கு இம்மாதம் நல்லதுதான். பண வசதிகள் அனுகூலமாயிருப்பதை உணலாம்.எதிர்காலம் பிரகாசமாயிருக்குமெனக் காண்கிறது. இரண்டாம் பகுதியில் திடீரென்று லாபமேற்படுமெனச் சொல்லலாம். குடும்ப வாழ்க்கை சுமுகமாகவும், மகிழ்ச்சிதருவதாயுமிருக்கும். அடிக்கடி குழந்தைகளின் தேகாரோக்கியம் பாதிக்கப்படும். இம்மாதத்தில் சில்லரையான கோளாறுகள் ஏற்படும். இவற்றைப் பிரமாதப்படுத்திக்கொள்ளும்படியும் தோன்றும். இம்மாத இறுதியோடு எதிரிகளால் இருந்து வந்த கவலைகள் ஒருவாறு ஒழியும். சகோதரர்கள் விஷயத்தில் அனுதாபத்துடன் நடந்துகொள்ளும்படியுமிருக்கும். புதிய, வாலிப நண்பர்களைத் தேடிக்கொள்வதற்கு இம்மாதம் உகந்தது. இதுவரையில் பாக்கியாக நின்றுபோயிருந்த கடிதப்போக்குவரத்து இம்மாதம் லாபகரமாகவும், பயன்தரத்தக்க வகையிலும் முடிவடையும். முதியவர்கள் அல்லது எஜமானர் ஆதரவேற்படும். இம்மாதம் இரண்டாம் பகுதி வியாபாரிகளுக்கு நல்லது. பணக்காரர்களானால் நிலம், வீடு இவற்றின் பேரில் பணம்போட நேரலாம். ஸெப்டம்பர் 17-ந் தேதி வாக்கில் ஹேஷ்யங்களில் இறங்கக்கூடாது. ஏனெனில் ஏதாவது சிக்கல்கள் ஏற்படுவதற்கு இடமிருக்கிறது. ஸெப்டம்பர் மாதம் கடைசீ மூன்று தினங்களில் புதிய வியாபார உடம்பாட்டுக்கு ஏற்ற நாட்களாகும். அக்டோபர் 4-ந் தேதி வரையில் லாபத்துக்கு ஏற்றதல்ல. அக்டோபர் 7-ந்தேதியோ அதற்குப் பின்னரோ ஹேஷ்ய வியாபாரங்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு விசேஷம். எதிர்பாராமல் பணம் வருவதற்கு இந்தக் கட்டத்தில் இடமுண்டு. பணவிஷயமான நடவடிக்கைகளில் தகராறு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதே மாதிரி குடும்பத்திலுள்ளவர்களுடனும் சச்சரவு ஏற்படாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். சிலருக்கு பொதுவாக ஆரோக்கியம் குன்றிப்போகும். அக்டோபர் 8, 9 தேதிகள் நம்பிக்கைத்தருவதாகவும், சந்தோஷகரமானதாயும் விளங்கும்.

ஸெப்டம்பர் 20, 28, 29, 30 அக்டோபர் 3, 4, 7, 8, 13, 14 தேதிகள் இவர்களுக்கு சிறந்த தினங்கள்.

கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

குடும்பம், உத்தியோகம் ஆகிய இரண்டு துறைகளிலும் மகிழ்ச்சிகரமான அனுபவங்களுண்டு; நல்லுணர்ச்சி, ஒத்துழைப்பு இவை இம்மாதம் கடக ராசிக்காரர்களுக்கு விசேஷாம்சங்கள். தேக நலமின்மையினால் சில தினங்கள் வரையில் கஷ்டப்படலாமென்றாலும் மொத்தத்தில் இந்த மாதம் சந்தோஷகரமானதேயாகும். வாழ்க்கை சுலபமாக நடந்து வரும். பணவிஷயத்தில் முன்னிருந்ததைவிட அதிகமான வசதிகள் இருக்கும். தீராமல் நின்றுபோன விஷயங்கள் சாதகமாக முடிவடையும். உறவினர்களை உபசரிக்க நேரும். சொந்த வசதிகளுக்காக ஜாகையில் மாறுதலை நாடத்தோன்றும். இவர்களில் சிலருக்குப் பிரயாணமொன்று ஏற்பட இடமுண்டு. கிட்டிய உறவினருக்கோ அல்லது சகோதரருக்கோ உதவி புரிந்தே தீரும்படியிருக்கும். கடிதப்போக்குவரத்து லாபகரமாக விளங்கும்.

சில இனங்களில் வருமான மார்க்கங்கள் பெருகும். செலவு ரொம்பப் பிரமாதமாக ஏறும். உத்தியோகத்தில் அபிவிருத்தி உண்டு. குழந்தைகளில் ஒருவரால் பின்பகுதியில் கவலை ஏற்படலாம். வியாபாரிகளுக்கு இந்த கட்டம் ஏற்றது. வியாபாரம் செழிப்பாக நடந்து உருவான லாபம் கிடைக்கும். இரண்டாம் பகுதியில் கண்மூடித்தனமான ஹேஷ்யங்களில் இறங்கக்கூடாது. இந்த சந்தர்ப்பத்தில் உணர்ச்சி மேலோங்கி, பிடிவாதமும் வளர்ந்து நிற்கும். புதிய வியாபாரத்தை நடத்த விருப்பமுண்டாகும். இதில் வெற்றியும் கிட்டும். மகிழ்ச்சி தரக்கூடிய நண்பர் ஒருவரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். முதல்பகுதியிலே வெளிவட்டாரங்களில் சந்தோஷகரமான வாழ்க்கையை அனுபவிக்கமுடியும். கல்யாணமாகாதவர்களானால் அவர்களது தற்கால வாழ்க்கை சிருங்காரரஸமுள்ளதாகவிருக்கும். கல்யாணமானவர்களானால் இம்மாதம் இரண்டாம்பகுதியில், அக்டோபர் 6-ந்

1948-ம் வருஷம் ஸெப்டம்பர்மீ 17-ந்தேதி காலையிலுள்ள கிரஹ நிலைமை.

	ராகு		உரானஸ்
சந்திரன்			சுக்கிரன்
	ராசி		சனி
	குரு	செவ்வாய் கேது	சூரியன் புதன்

தேதிக்குப் பிறகு புருஷன் அல்லது மனைவியின் தேகாரோக்கியம் பாதிக்கப்படும்.

செப்டம்பர் 19, 23, 27, 29, 30. அக்டோபர் 2, 6, 8, 12, 15, தேதிகள் இவர்களுக்கு உத்தமமான நாட்கள்.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

ஸிம்மராசிக்காரர்களுக்குத் தங்கள் மனைவியின் தேகநிலைமையே இம்மாதம் முக்கியமாக விருக்கும். லக்னத்தில் சனி இருப்பதால், முதுகுவலி, எலும்பு மூட்டுகளில் வலி, மனச்சுணக்கம் இவையெல்லாம் ஏற்படும். இம்மாதம் முதல் பகுதி முடியும்வரை இவ்வுபாதைகள் அதிகமாயிருக்கும். செலவு ரொம்ப அதிகமாக ஏற்படும். இருப்பினும் வருமானத்துக்கும் குறைவில்லை. எதிர்பாராத செலவுகளுக்காகப் பணம் சேகரிக்க நேரும். இதை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்திக்கொள்வது நலம். அலட்சியமாக இல்லாமல் கஷ்டப்பட்டு வேலைசெய்யும்பட்சத்தில் அதிக வருமானத்துக்கும் இடமுண்டு. உத்தியோகத்தில் முன்னையும்விட அதிகமாக வேலைப் பளு ஏற்படும்.

கொடுக்கப்பட்டுள்ள வேலையிலும் ஒரு சிறுமாறுதலேற்படலாம். இது செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குப் பின்னர் எந்த சமயத்திலும் நிகழலாம். இதற்கிடையே சகபாடிகளுடன் தப்பு அபிப்ராயத்துக்கு இடம் வைத்துக் கொள்ளக்கூடாது. கல்யாணமாகாதவர்களுக்கு விவாஹம் நடைபெறும். அக்டோபர் 4-ந் தேதி பண விஷயத்தில் அதிருஷ்டத்தைத் தரும். பெரியவர் ஒருவருடைய ஆதிக்கம் இன்னும் கொஞ்ச காலத்துக்கு நீடிக்கும். உத்தியோகம், குடும்பம், வெளியிடம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் எதிர் காலத்தில் நம்பிக்கை கொண்டு, சந்தோஷமாக நடந்து கொள்ள வேண்டும். அக்டோபர் 7-ந் தேதி செவ்வாய் விருச்சிகத்துக்கு வரும்போது அனுகூலம் பயக்கும் வகையில் குடும்பத்தில் மாறுதலேதேனும் ஏற்படும். பணக்காரர்களானால் வீடு, நிலம் போன்றவற்றில் பணம் போட நேரும். வியாபாரிகள் இம்மாதம் முக்கியமாக இரண்டாம் பகுதியில் அனுகூலத்தை அடைவார்கள். கூட்டாக வியாபாரம் செய்யும் முறை பற்றி யோசனை எழுந்து அதை வெற்றிகரமாக நடத்தக்கூடும். பழைய வியாபார உடம்பாடுகளும், வாடிக்கைகாரர்களும், வர்த்தக வட்டாரத்தில் மிக முக்கியமான ஸ்தானத்தை வகிக்கலாம்.

செப்டம்பர் 19, 23, 29, 30, அக்டோபர் 4, 8, 13, 15 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

கன்னியா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

கன்யாராசிக்காரர்கள் இம்மாதம் தங்கள் தேகாரோக்கியத்தைக் கவனித்துக் கொள்ளுவது முக்கியகடமை. லக்னத்தில் சூரியன்; 8-வது வீட்டுக்குடைய கிரஹம் 8-வது இடத்தைப் பார்ப்பது; 6-வது வீட்டுக்குடையவர் 6-வது இடத்தைப் பார்ப்பது; 8-ல் ராகு இருப்பது இவை அனைத்தும் இம்மாதம் தேக நிலை திருப்திகரமாயிராதென்பதைக் குறிக்கும். எனவே சாப்பாடு சம்பந்தமாயும், ஆரோக்கியம் சம்பந்தமாகவும் மிக்க உஷாராயிருத்தலவசியம். பண விஷயத்தில் நிலைமை ஒரே சீராயிராது. முன்னிருந்ததைக் காட்டிலும் கோபம் அதிசீக்கிரமாக வரும். நிதானத்தை இழக்கவும் நேரும். தேக சுகமின்மையாலும், இன்னும் இதர இனங்களினாலும் செலவுக் கட்டுக்கடங்காமல் ரொம்பக் கடுமையாகவிருக்கும். முதல் பகுதியில் சுற்றியுள்ளவர்களிடம் சண்டை சச்சரவு வைத்துக்கொள்ளாமலிருக்க வேண்டும். வருமானத்தைக் குறிக்கும் கிரஹம் 11-வது இடத்தில் இருப்பதால் உத்தியோகத்தில் நல்ல லாபம் வர இடமுண்டு. புருஷராயிருந்தால் ஸ்திரீயின் நேசத்தைப் பெறலாம்; ஸ்திரீயாயிருந்தால் புருஷரின் நேசத்தைப் பெறலாம். உத்தியோகத்தில் இன்னும் சில தினங்கள் வரையில் மன நிம்மதியிராது. எதிர்பார்க்கும் வகையில் கீழ்த்தரச் சிப்பந்திகள் நடந்துகொள்ளமாட்டார்கள். சூழ் நிலைமையிலிருந்து மீட்சி பெறுவதற்குப் பொறுமையொன்றுதான் இந்த ராசிக்காரர்களுக்கு ஆயுதம். குழந்தைகளில் ஒருவரால் கவலைகள் ஏற்படும். அக்குழந்தை எதிர்பார்த்தபடி இராது. இதற்கு 2 வருஷ காலமாகும். உத்தியோகத்துறையில் ஓய்வும், சுயேச்சையும் தேவையாயிருக்கும். வியாபாரிகளுக்கு இது நல்ல மாதமென்பதற்கில்லை. எதிர்பார்த்த வருமானமில்லாமல் பணம் வியாபாரத்தில் மூடங்கிக்கிடக்கும். இரண்டாம் பகுதியைவிட முதல் பகுதி விசேஷம். புதிய வியாபார முயற்சிகளில் பிரவேசிக்காமல் விலக்குவது நலம். 12, 1, 2 இடங்களில் பாபக் கிரகங்களிருப்பதால் புது வியாபாரமோ, ஹேஷ்யமோ செய்தால் நிச்சயம் நஷ்டம் வந்து சேரும். உணர்ச்சிப் பெருக்கோடிருந்து, இஷ்டப்படி சென்றால் சூழ்நிலைமையினால் பாதகமே விளையும். சாத்விக முறையில் காலத்தைத் தள்ளுவதால்தான் சந்தோஷத்தையும், அதிருஷ்டத்தையும் தேடிக்கொள்ள முடியும்.

செப்டம்பர் 19, 20, 29 அக்டோபர் 5, 7, 8, 13, 14 தேதிகள் இவர்களுக்கு உயர்ந்த தினங்கள்.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

துலாராசிக்காரர்களுக்கு இந்த மாதம் வசதிகரமானதாகும். வாழ்க்கை சுலபமாக நடைபெறும். லக்னாதிபதி வலுத்திருப்பது எண்ணிய நோக்கங்கள் ஈடேறுமென்பதைக் குறிப்பதாகும். பண விஷயத்துக்கு இரண்டாம் பகுதி விசேஷம். லக்னத்தில் செவ்வாயிருப்பதால் நேர்மையில்லாத சூழ் நிலையில் இருக்க நேரும். அனுவசியமாக நம்பிக்கைகளை வைத்துக்கொள்ளவும் தூண்டும். எனவே நண்பர்களால் ஏமாற்றமடைய நேரும். மனைவியின் தேகசுகம் திருப்திகரமாயிராது. நிலம், சொத்துக்கள் போன்ற இனங்களில் நடவடிக்கை எடுக்கும்

போது உஷாராயிருக்கவேண்டும். இல்லையானால் முற்றிலும் ஏமாற்றமே. சனி, செவ்வாய் இவ்விரு கிரஹங்களும் பெற்றிருக்கும் ஸ்தான விசேஷம் காரணமாக குடும்பத்தில் நிம்மதியாயிருக்க முடியாது. வேறு ஜாகை பார்ப்பதற்கான அவசியமும் பிறக்கும். உத்தியோகத்தில் உயர்வும், ஊதிய உயர்வும் உண்டு. குழந்தைகளில் ஒருவரது தேக நிலை பற்றிக் கவலைப்படும்படி நேரும். ஆனால் உயிருக்கு ஆபத்தொன்றும் இல்லை. இப்போது ஈடுபட்டுள்ள அலுவலிலேயே புதிதாக விஷயங்களைத் தெரிந்துகொள்ள இயலும். கூடுமான வரையில் உணர்ச்சிப் பெருக்குடன் நடந்துகொள்ளும் மனோபாவத்தையும், அவசரக் காரியங்களையும் தவிர்க்கவேண்டும். வியாபாரிகள், தாங்கள் செய்யும் ஹேஷ்யங்களில் லாபத்தைக் காண்பார்கள். இலாகாக்களில் சேவை புரிபவர்களுக்கு முதல் பகுதி விசேஷம். இயந்திர சம்பந்தமான இலாகாக்களில் உள்ளவர்களுக்கு இரண்டாம் பகுதி தரம். இவர்களுடைய வருங்காலம் இன்னும் பிரகாசமுள்ளதாக விளங்கும். நட்போ, அல்லது கூட்டாளி முறையோ இம்மாதத்தில் அனுகூலத்தைத் தருவதாயிராது. நண்பர்களிடம் நம்பிக்கை வைத்துப் பயனில்லை.

செப்டம்பர் 19, 25, 27, 30, அக்டோபர் 7, 8, 12, 15, தேதிகள் இவர்களுக்கு சிரேஷ்டமானவை.

விருச்சிகராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

விருச்சிக ராசிக்காரர்களுக்கு உத்தியோகம், குடும்பம் இவற்றிலெல்லாம் ஏமாற்றங்கள், கெடுதலான விளைவுகள் முதலியன விருந்தாலும் இந்தமாதம் சாதகமாயும், அதிர்ஷ்டகரமாகவுமே விளங்கும். குரு முதலிடத்திலிருப்பதும், 11-வது வீட்டுக்குடைய கிரஹம் 12-ல் உச்சம்பெற்றிருப்பதும் பண விஷயத்தில் இம்மாதம் வெற்றிகரமாயிருக்கும் என்பதைக் குறிக்கும். உத்தியோகத்தினால் லாபமேற்படும். சேர்த்து வைக்கப்பட்ட சம்பாத்தியத்தாலும் அனுகூலமுண்டு. இன்னும் ஒருமாதம் வரைக்கும் செலவு கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டேயிருக்கும். சொந்த செலவில் பிரயாணம் ஒன்றும் சித்திக்கும் அல்லது இந்த மாதத்தில் இந்த ராசிக்காரர்கள் சிரத்தைகொண்டு முன்னிருந்து செய்யும்படியான சுபகாரியங்களேதேனும் ஏற்படலாம். விரும்பத்தகாதவர்களுடைய சகவாசத்தை விலக்கலாம். இந்த கட்டத்தில் நண்பர்கள் பலர் ஏற்படுவார்கள். இவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வதில் விவேகமாக இருக்கவேண்டும். இல்லையானால் தொந்திரவுதான். குடும்ப வாழ்க்கையில் விரும்பத்தக்கதொரு மாறுதல் நிகழும். இம்மாதம் முதியவர்கள் அல்லது மேலதிகாரிகளின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் லாபமுண்டு. பணக்காரர்களானால் சிறந்தவாகனப்பிராப்தி ஏற்படும். பின்னாலிருந்துகொண்டு எதிரிகள் வேலைசெய்வார்களாதலால் உஷாராயிருக்கவேண்டும். கீழ்த்தரச் சிப்பந்திகள் சரிவர ஒத்துழைக்காமல் போவதால் உத்தியோகத்தில் கவலைகளிருந்துவரும். வியாபாரிகளுக்கு இந்த சமயம் சிறந்தது. கூட்டாளியாகச் சேர்ந்து வியாபாரம் செய்யும் முறையும் லாபகரமாக விளங்கும். திருட்டினாலோ, அல்லது அஜாக்கிரதையினாலோ திடீரென்று நஷ்டமேற்படுவதற்கும் இடமிருக்கிறது. கீழே விழுந்தோ அல்லது கால் வழுக்கியோ சுளுக்குபோன்ற உபாதைகளேற்படலாம்.

செப்டம்பர் 19, 23, 27, 29, 30, அக்டோபர் 1, 8, 12, 15 தேதிகள் இவர்களுக்கு திருப்திகரமான தினங்கள்.

தனுர்ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

தனுர்ராசிக்காரர்களுக்கு இம்மாதத்தில் நல்லதும் கெட்டதும் கலந்து கட்டியாகவிருக்கும். குரு சரியான இடத்தில் இல்லையென்றாலும் மற்ற கிரஹங்கள் சாதகமாகவே அமைந்திருக்கின்றன. பண விஷயத்தில் செலவு அதிகமெனினும், பண வசதிக்குக் குறைவில்லை. பணக்காரர்களானால் நல்ல முதலீடுகளில், பணத்தைப் போடும்படியிருக்கும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வுண்டு. வேலையிலோ அல்லது வேலைசெய்யும் இடத்திலோ மாறுதலேற்படும். எஜமானரின் பிரீதிக்குப் பாத்திரமாகலாம். சகோதரர்களில் ஒருவரோ அல்லது சகோதரியோ இந்த ராசிக்காரர்களுக்கு மிகுந்த திருப்தியை தரக்கூடும். குமாரர்களில் ஒருவருக்காக எதிர்பாராத தொகையைச் செலவிடும்படி ஏற்படும். பணம் கடன் வாங்குவதோ கொடுப்பதோ கூடாது. நண்பர்களில் சிலர் சுமுகமாக நடக்க மாட்டார்கள். உறவினர்களும் குடும்பத்தவரும் இந்த ராசிக்காரர்களிடம் நிஷ்டூரமாக நடந்து கொள்வர். செலவுதான் இந்த சந்தர்ப்பத்தில் பிரதானமாயிருக்கும். அக்டோபர் மாதம் 15-ந் தேதியிலிருந்து இந்த அம்சம் அதிகமாகும். வியாபாரம் சாதாரணமாக நடந்து வரும். புது வியாபாரம், புதிய வாடிக்கைக்காரர்கள் இம்மாதத்திய பிரத்யேகாம்சம். இம்மாத இரண்டாம் பகுதி விசேஷமாயிருப்பதுடன் லாபகரமாயுமிருக்கும். தூரதேசப் பிரயாணத்தால் லாபமிராது. உள்ளூரில் செய்யும் வியாபாரமே திறம்பட நடக்கும். முன்பு பணம் கொடுத்து உதவிய முதலாளிகள் இந்த சமயத்தில் உதவி புரிய முன் வருவார்கள். புதிதாக மணம் செய்து கொண்டவர்கள் இந்த கட்டத்தில் மிகுந்த சந்தோஷத்தை அனுபவிப்பர். வெகுமதிகளினால் அவர்களுக்கு லாபமேற்படும்.

செப்டம்பர் 19, 30, அக்டோபர் 3, 6, 8, 12, 16 தேதிகள் இவர்களுக்கு ஏற்ற நல்ல நாட்கள்.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம்பாதம் முடிய.)

சென்ற மாதத்தில் மகரராசிக்காரர்களுக்கு நிலைகொள்ள முடியாமல் வெறிபிடித்தாப்போல் நடந்துகொள்ளும்படியிருந்த காலம் இப்போது முடிவடைந்துவிட்டது. தடைகளாலும், சுணக்

கத்தாலும் தலை நிமிரமுடியாதிருந்த நிலைமை வெகுவாகக் குறைந்திருப்பதை இம்மாதம் உணர முடியும். ஈடுபட்டுள்ள வாழ்க்கைப் பாதையில் முன்னேற்றமுண்டு. முதியவர்களின் ஆதரவு கிட்டும். ஒரு சடங்கின் நிமித்தம் தூரதேசப் பிரயாணம் செய்ய நேரலாம். புதிதாக முயற்சிகளைச் செய்ய இம்மாதம் ஏற்றதன்று. சமீபத்தில் விசித்திரமான முறையில் சிக்கிக்கொண்ட உத்தியோக விவகாரங்கள் அல்லது வியாபாரப் பிரச்னைகளைச் சரிப்படுத்தி வைப்பதில் கவனத்தைச் செலுத்த வேண்டும். இம்மாத முதல் பகுதி உத்தியோகத்தில் கொஞ்சம் திருப்தியைத் தரும். இரண்டாம் பகுதியில் உத்தியோகம், குடும்பம், அல்லது பண விவகாரங்கள் இவற்றில் ஏதேனும்ஒன்றில் ஏமாற்றமேற்படும். தேகாரோக்கிய விஷயத்தில் பூர்ணமாகக் கவனம் செலுத்தவேண்டும். வாயுக்கோளாறால் கஷ்டப்பட நேரலாம். வயோதிகர்களானால் மூத்திர சம்பந்தமான உபாதைகளால் வருந்த நேரலாம். வாயுவை உண்டுபண்ணக்கூடிய, உருளைக்கிழங்கு போன்ற உணவு வகைகளை விலக்கவேண்டும். உச்சத்திலுள்ள புதன்காரணமாக புதிய நம்பிக்கைகள், உற்சாகம், எதிர்காலத்தைப் பற்றிய மார்க்கங்கள் முதலியவையெல்லாம் மனதில் உதிக்கும். முன்னிருந்ததைக்காட்டிலும் சற்று சாதகமான நிலையில் பண விவகாரங்கள் அபிவிருத்தியடையும். வியாபாரிகளுக்கு முன்னையும்விட அடுத்தமாதம் அதிருஷ்டகரமாகத் தோன்றும். வாலிப நண்பர்களை நம்பக்கூடாது. கிட்டிய பந்துக்களால் அதாவது சகோதரர் போன்றவர்களால் மன அமைதிகெடும். இவர்களில் ஒருவருக்கு அத்தியாவசியமான சமயத்தில் உதவி புரிய நேரிடும். இவையெல்லாம் இருந்த போதிலும் மனத்திருப்திமட்டும் இராது. மனைவியினால் இன்னும் சிறிதுகாலத்துக்குக் கவலைப்படும்படியாயிருக்கும்.

செப்டம்பர் 19, 21, 27, 29 அக்டோபர் 1, 8, 13, 15 தேதிகள் இவர்களுக்கு தரமான தினங்கள்.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

கும்பராசிக்காரர்களுக்கு சூரியன் 8-வது இடத்தில் இருக்கிறார். அங்கு 5-8 இடங்களுக்கிடைய புதனும் உச்சமாயிருப்பதால் குடும்பத்தவர்களுடைய தேகநிலை பற்றியோ குழந்தைகளின் தேகசுகம் பற்றியோ கவலைப்படும்படியிருக்கும். மனமும் வெகுவாகச் சுணங்கிக் கிடக்கும். மேலே சொன்ன கிரகச் சேர்க்கை சொந்த தேகாரோக்கியத்துக்கும் உகந்ததில்லை. வயிற்றுக்கோளாறுகள் ஏற்படலாம். இம்மாதம் ஒரு பிரயாணம் வாய்ப்பதற்கும் இடமுண்டு. 4-வது இடத்தில் சுக்கிரன் இருப்பதும் 8-வது இடத்தில் சூரியனிருப்பதும் பெற்றோர்களுடன் உள்ள உறவுக்கு ஏற்றதன்று. அல்லது முதியவர்களிடம் கொண்டுள்ள தொடர்புக்குச் சாதகமானதாயிராது. 7-வது இடத்திலுள்ள சனி இந்த ராசிக்காரர்களை இன்னும் 2½ வருஷங்களில் வாழ்க்கையின் முன்னணியில் கொண்டுவரக்கூடிய தன்மையைப் பெற்றிருக்கிறது. எனவே சூழ் நிலைமையில் காணப்படும் பிரகாசமான சந்தர்ப்பங்கள் அனைத்தையும் சாதகமாகப் பயன்



படுத்திக்கொள்ள வேண்டும். பொதுவாக நடைபெறும் விசேஷங்களினால் இவர்கள் முன்னிலைக்குவர முடியும். இவர்கள் செய்யும் நல்ல காரியங்களுக்காக வெளியில் நல்லபெயர் கிட்டும். மேலிடங்களில் உள்ளவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக இந்த ராசிக்காரர்களின் சேவையைப் புகழ்ந்து பாராட்ட ஆரம்பிப்பார்கள். இந்த விஷயத்தில் இந்த ராசிக்காரர்களுக்குப் பொறுமையிராது. இருப்பினும் குரு 10-வது இடத்தில் இருப்பதாலும் சனி 7-ல் இருப்பதாலும் இவர்களது எதிர்காலம் மேலதிகாரியிடம் பத்திரமாகவிருக்கும். எஜமானரிடமிருந்து தாமதமாக ஆதரவு வரும். அதற்காக வருந்தவேண்டியிராது. இப்போதிருப்பதைவிட இனி இன்னும் கடுமையாக வேலை செய்யும்படி இருக்கும். கூடிய சீக்கிரத்தில் 1948-ம் வருஷம் முடியுமுன்னதாக பிரத்யேகமாக இவர்களது சேவை அங்கீகாரம் பெறும். சகோதரர்களில் ஒருவரைப்பற்றித் தீவிரமாகக் கவனம் செலுத்தும்படி நேரும். இதிலும் கூடிய சீக்கிரம் திருப்தி ஏற்படும். செலவு ப்ரமோச்த்திலிருக்கும். இதைத் திறம்படக் கட்டுப்படுத்தாவிட்டால் பண விஷயத்தில் மேற்கொண்டு நிலைமை சீர்கேடடையும். வியாபாரிகளுக்கு கால நடப்பு நன்றாயிருக்கும். கூட்டாளி முறையில் அதிகலாபம் பெறுவர். 7-வது இடத்தில் சனியிருப்பதால் யந்திரங்கள் மூலமாகவும் லாபம் வரும்.

ஸெப்டம்பர் 19, 20, 29, 30 அக்டோபர் 8. 12 13, 15 தேதிகள் இவர்களுக்குப் உபயோகமான நாட்கள்.



பாடகர்:—என்னண்ணா! எப்போ நீங்க அடியேன் கச்சேரிக்கு வந்தாலும் கடைசிலே போய் ஒக்காந்துக்கிறேளே? உம்மைபோல பரம ரஸிகாள்ளெல்லாம் முன்னாலே வந்து ஒக்காந்துண்டாதானே எங்களுக்கு உற்சாகமா இருக்கும்.

பரம ரஸிகர்:—இதோ பாரும். சில கச்சேரிகளை கடைசிவரையில் இருந்து கேட்க முடியறதில்லே. கடைசிலே ஒரு ஓரமா ஒக்காந்தா வேணும்ங்கிறபோது "நைஸா" வெளியேற சௌகரியமாயிருக்கு பாருங்கோ.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

மீன ராசிக்காரர்களுக்கு இம்மாதம் சூரியன் 7-வது இடத்திலிருப்பதாலும், 8-வது இடத்தில் செவ்வாய் இருப்பதாலும் வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையில் சில தடைகளேற்படும். பண வசதிக்கும் இந்நிலைமை நல்லதாயில்லை. சில சமயங்களில் பண நெருக்கடியும், இன்னும் சில சமயங்களில் பண வசதியும் ஏற்படும். பெரிய கிரகங்களெல்லாம் இந்த ராசிக்காரர்களுக்குச் சாதகமாகவே இருக்கின்றன. 8-வது வீட்டுக்குடைய கிரஹம் 5-வது வீட்டிலிருப்பதும், 12-வது இடத்தைச் சனி பார்ப்பதும் செலவு கட்டுமீறி அதிகமாயிருக்குமென்பதைக் குறிக்கும். யாருக்கும் கடன் கொடுக்கக் கூடாது. ஏனெனில் தகராறின்றி சுலபமாக கடனைத் திரும்பப்பெற முடியாது. விவாகமாகாதவர்கள் இம்மாதம் தங்கள் வாழ்க்கைத் துணைவரை நிர்ணயித்துக் கொள்ளலாம். சில இனங்களில் விவாகமே நிகழவும் கூடும். உத்தியோகத்தில் ஏதாவது அபிவிருத்தி ஏற்படும். குறைந்தபட்சம், செய்யும் வேலையில் மாறுதலாவது உண்டு. ஊழியர்களைப் பொறுத்துள்ள இடத்தில் சனி இருப்பதால் கீழ்த்தரச் சிப்பந்திகளினாலோ அல்லது வேலைக்காரர்களினாலோ கவலைகளேற்படும். கேது, செவ்வாய், சனி ஆகிய கிரஹங்கள் பெற்றிருக்கும் இடம் உவகை தருவதாயில்லை. இவர்களால் தேகாரோக்கியம், வயிற்றுவலி போன்ற தொந்தரவுகளினால் பாதிக்கப்படும் அல்லது ஏமாறுவதாலோ, திருட்டாலோ நஷ்டமேற்படும். இக வாழ்வைப் பொறுத்துள்ள, மதிப்பு, நாணயம், பொதுவான செல்வாபிவிருத்தி முதலியவைகளெல்லாம் கிரஹங்களின் சுப வீட்சண்யத்திலிருக்கின்றன. வியாபாரத்தில், கூட்டாளி முறை லாபத்தைத் தருவதாயிருக்கும். கூட்டாளிமுறை இல்லாதஇனத்தில் அந்த ஏற்பாடு உருவடையும். நிலம் அல்லது பத்திரங்கள் இவற்றில் பணத்தை முதலீடு செய்ய நேரும். பிறர்வசம் போன பணம் மீண்டும் கைக்கு வரும். நீடித்த நண்பர்களில் சிலர் திடீரென்று விரோதமாகப்போவார்கள் அல்லது தீவிரமாக எதிர்த்து நிற்பார்கள்.

ஸெப்டம்பர் 21, 27, 30 அக்டோபர் 1, 7, 8, 12, 13, 15 தேதிகள் இவர்களுக்கு நல்ல நாட்கள்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
5, வாசுதேவபுரம்,
ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.

சமயோஜித புத்தி

—பி.ஸி. பாலகிருஷ்ணன்

சிங்காபுரி என்னும் ராஜ்யத்தை ராஜவர்மன் என்று ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் ஏழைகளிடமும் எளியவர்களிடமும் மிக்க அன்புடையவன். கலையில் வல்ல ஏழைகளுக்கு அவன் விசேஷ உதவி அளித்து கலையை விருத்திசெய்து வந்தான்.

ராஜவர்மன் சிங்காபுரியின் தலைநகரில் ஓர் பெரிய கட்டிடத்தில் அழகிய சித்திரங்களையும் கவிதைகளையும் பத்திரப்படுத்தி வந்தான். புதிய காவியம் எது கிடைத்தாலும் உடனே அதை அக்கட்டிடத்தில் சேர்த்துவிட அரசன் தன் பிரஜைகளுக்கு உத்தரவு போட்டிருந்தான்.

சிங்காபுரியின் வடகோடியில் வேளாளர் குலத்தில் கவியரசன் ஒருவன் தோன்றி இருந்தான். அவன் பெயர் முத்து. முத்து தன் முன்னோர்களின் கலப்பையைச் சிறிதும் விரும்பவில்லை. படிப்பு என்றால் அவன் மயங்கிக் கிடந்தான். அவன் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றில் படிக்கக் கற்றுக்கொண்டு முறையே அதை விருத்திசெய்துகொண்டான். காவியங்களைப் படிக்கும்போது அவன் மெய் மறந்து இருந்துவிடுவான். தேவலோகத்தில் இருக்கிறோமோ என்றெல்லாம்கூட அவனுக்குத் தோன்றிவிடும்.

அவனுடைய தகப்பன் அவனைப் பலவாறு வைது "வேளாளனின் பிள்ளை வேளாளனே தவிர கவிஞனாகவோ, சித்திரக்காரனாகவோ முடியாது" என்று அடிக்கடி சொல்வான். ஆனால் அது ஒன்றும் முத்துவின் காதில் ஏறவில்லை.

அவன் பெற்றோர்கள் இறந்தபின், முத்து தன் தகப்பனுக்குச் சொந்தமாயிருந்த நில புலன்களை விற்று ஒரு நிஜக் கவிஞனின் வாழ்க்கையை ஆரம்பித்தான். தன் பசியையும் பொருட்படுத்தாமல் கவிதை எழுதிக்கொண்டே இருந்தான்.

ஆனால் முத்து எவ்வளவு அழகிய காவியம் எழுதினாலும் அது பிரசித்தி பெறவில்லை. ஆகவே அவன் மனம் புண்பட்டு விட்டது. தன் வருத்தத்தை ஓர் காவியமாக எழுதி ஓரிரண்டு தடவைகள் படித்துப் பார்த்தான். அதன் அழகு அவனையே பிரமிக்கச் செய்தது. இருந்தும் என்ன பிரயோசனம்? அவன் காவியங்கள் தான் பிரசித்தி பெறாதனவாயிற்றே!

காவியத்தை தூக்கி எறிந்துவிட்டு முத்து தன் குடிசைக்குச் சென்றான். அவன் தூக்கி எறிந்த காவியம் அரசனின் ஆட்கள் கையில் சிக்கியது. அவர்கள் அதை அரசனிடம் தந்தனர். அவன் அதைப் படித்து மயங்கிவிட்டான்.

"இக்கவிஞனை உடனே இங்கு வரச் சொல்லுங்கள்!" என்று தன் மந்திரியிடம் சொன்னான் அரசன். மந்திரி ஒரு தூதனிடம் கவிஞன் முத்துவுக்கு ஓலை கொடுத்தனுப்பினான்.

ஓலை கையில் கிடைத்த முத்துவுக்கு தலைநகரை எவ்வாறு அடைவது என்றாகிவிட்டது. ஏனென்றால் தலைநகர் முத்து இருந்த இடத்திலிருந்து வெகு தூரத்தில் இருந்தது. வண்டிக்கு செலவழிப்பதென்றால் அவனிடம் தம்பிடி கூட இல்லை. கால் நடையாய் போவது இன்னும் அசாத்தியமானது.

பலவாறு யோசித்த முத்து ஓர் தீர்மானத்துக்கு வந்தான். சில ஓலைச் சுவடிகளை எரித்

துச் சாம்பலாக்கி மூன்று சிறு சிமிழ்களில் அடைத்து அவைகளில் முறையே "அரசனுக்கு விஷம்," "அரசிக்கு விஷம்," "அரச குமாரனுக்கு விஷம்", என்று எழுதித் தொங்கவிட்டான். பிறகு தரையில் படுத்து உறங்க ஆரம்பித்தான்.

அச்சமயம் அங்கு வந்த ஓர் வேளாளன் சிமிழ்களையும் அவைகளிலிருந்து தொங்கும் ஓலைகளையும் கண்டு ஆச்சரியமுற்று ஓலைகளில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தான். ஓலைகளைப்படித்த வேளாளன் மிக்க கோபமடைந்து "ஓஹோ, இது கூட ஆரம்பித்துவிட்டாயா? பார், உன்னை என்ன செய்கிறேன் என்று. நீ யாரைக் கொல்ல முயலுகிறாயோ அவனே உன் கழுத்தில் கயிற்றை மாட்டுவான்" என்று மனதில் சொல்லிக் கொண்டே வெளியே சென்று அரசனின் வீரர்களிடம், தான் கண்டதை அறிவித்தான்.

ராஜவர்மன் முத்துவின் வரவிற்காக காத்திருக்கும் சமயம் முத்து விலங்கு பூட்டப்பட்டு அரசனுக்கு முன் நிறுத்தப்பட்டான். முத்து அரசனின் மகிமையைப் பற்றி ஓர் காவியம் உரைத்தான். அவன் ஒருகவி என்று அறிந்து கொண்ட அரசன் "கவிஞனே, நீ என்ன குற்றத்தை செய்திருக்க முடியும்?' என்றான்.

அதற்கு வீரர்கள் முத்து வைத்திருந்த மூன்று சிமிழ்களைப்பற்றிச் சொன்னார்கள். ஆச்சரியமுற்ற அரசன், "கவிஞனே, நீ ஏன் என் வம்சத்தாருக்கு விஷம் கொடுக்க எண்ணினாய்?" என்று கேட்டான்.

"அரசே, சற்று காது கொடுத்துக் கேளுங்கள். நான் நடந்தவற்றை எல்லாம் சொல்கிறேன். நான்தான் முத்து என்னும் கவிஞன். என் கவிதையைப் படித்த நீங்கள் என்னை இங்கே அழைத்தீர்கள். என் இருப்பிடத்திலிருந்து இங்கு வருவதற்கு வண்டி இல்லாமல் முடியுமா? வண்டிக்கு செலவிட ஏழைக் கவிஞனிடம் பணம் ஏது? நடந்துவருவது சாத்தியமாகத்தோன்றவில்லை. ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதுபடியே நான் சில ஓலைகளின் சாம்பரை மூன்று சிமிழ்களில் அடைத்து முறையே "அரசனுக்கு விஷம்", "அரசிக்கு விஷம்" "அரசகுமாரனுக்கு விஷம்" என்று எழுதித் தொங்கவிட்டேன். ஒரு தம்பிடி கூடச் செலவில்லாமல் தங்களிடம் வந்து சேர்ந்து விட்டேன். இனிமேல் நான் எந்த தண்டனைக்கும் தயார் தான்" என்றான் கவிஞன்.

"கவிஞனே, உனக்கு நான் விதிக்கப்போகும் தண்டனை இதுதான். நீ என் அரண்மனைக் கவிஞனாக இருப்பாய்" என்று சொல்லிவிட்டு மந்திரியிடம் திரும்பி,

"நல்ல உபசாரம் செய்தீர், ஐயா! கவிஞனை அழைத்து வர ஓர் பல்லக்கல்லவோ அனுப்ப வேண்டும்! எப்படியும் கவிஞனின் சமயோஜித புத்தியே அவனை இங்கு கொண்டு வந்து சேர்த்தது" என்று சிரித்தான் ராஜவர்மன்.

சகோதரன் ஹரி
"குலிஸ்தான்"
கார், பம்பாய் 21.

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்ம

இதுவரையில்...

[எட்டாம் நூற்றுண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக்கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனுபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனே கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறுன். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிருர். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிருர்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொருமையுண்டாக்குகிறது.]

22

பெற்றேரும் பிள்ளையும்

மதுரைமாநகரில் பகவானுக்குப் 'பல்லாண்டு' பாடிப் பக்தி மதத்தின் வெற்றிக் கொடியைப் பறக்கவிட்டுப் 'பட்டர்பிரான்' என்ற பட்டம் பெற்று விஷ்ணுசித்தர் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பிய பின்புதான், கொடும்பைப்போர் நடந்தது. அதில் கலகக்காரர்கள் படுதோல்வி அடைந்தார்கள். எனினும் பாண்டியனுள்ளத்தில் அமைதி ஏற்படவில்லை. 'விஷ்ணுசித்தரை உபசரித்ததும், அவருடைய உபதேசங்களைக் கேட்டதும், அவர் வெற்றி கண்டு பரிசளித்ததும், அவருடன் ஊர்வலம் வந்ததும், அவர் பாடிய 'திருப்பல்லாண்டு' என்ற வாழ்த்துப் பாடல்களைக் கேட்டதும் அரசனுக்கு ஆனந்தமாகவே இருந்தன.

பவனியிடையே பட்டர்பிரான், பொன்மலை மேல் எழுந்த நீலமேகமாகப் பகவானைத் தரிசித்துப் 'பல்லாண்டு' பாடினுரல்லவா? யானைக் கழுத்தின் மேல் கிடந்த மணிகளைத் தாளமாக்கி ஆனந்தக் கண்ணீர் சோர,

பல்லாண்டு, பல்லாண்டு,
பல்லா யிரத்தரண்டு
பல்கோடி நூரு யிரமும்
மல்லாண்ட திண்தோள்
மணிவண்ணு! உன்[காப்பு
சேவடி செவ்விதிருக்

என்று பாடியதும், அந்தப் பாட்டின் மகிமையால், அந்தக் குரலின் வசீகர உருக்கத்தால், அந்தத் தேவகானத்தின் திவ்ய சக்தியால், அவர் பாடிய 'மணிவண்ண'னை அரசனும் கண்டு கொண்டதுபோல் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

ஆனல் விஷ்ணுசித்தர் வில்லிபூத்தூருக்குத் திரும்பியதும், அரசன் தான் அடைந்திருந்த தெய்வீக உத்ஸாகத்தை இழந்துவிட்டான். பழைய சோர்வு மறுபடியும் பற்றிக்கொண்டதோ என்று தோன்றியது. எனினும் கொடும்பை யுத்தத்திற்கு அவசியமான முயற்சிகளிலும், பிறகு அந்தப் போராட்டத்திலும் சோர்வை மறந்திருந்தான். இப்போது பூர்ண வெற்றியடைந்தும் அமைதி ஏற்படாததற்குக் காரணமென்ன?

'இனி இத்தகைய ராணுவ வெற்றிகளால் பயனில்லை. இந்த ஹிம்ஸை—மார்க்கத்திலே தோல்வி யடைந்து நான் அரசு துறந்து அந்தப் பெரியாரை அடைந்து அவருடைய நந்தவனத்திலே செடி கொடிகள் பயிர் செய்து வந்தாலும் அமைதி ஏற்படுமே!' என்று தனக்குள் தானே ராஜஸிம்மன் சொல்லிக்கொண்டான். 'ஞானசாரியர் கிடைத்தும் ஞானபக்தனுகும் பாக்கியம் பெற்றேனில்லை; வாராதுபோல வந்த பெரும் பாக்கியத்தை இழந்தேனே!' என்று மறுபடியும் சொல்லிக்கொண்டான்.

இந்த வார்த்தைகளை ராஜஸிம்மன் வாய்விட்டுச் சொல்லிவிட்டான். கேட்டுக்கொண்டே வந்த பூசுந்தரி, 'ஏன் இந்தச் சுயநலம் உங்களுக்கு?' என்று திடீரென ஒரு கேள்வி போட்ட வண்ணம் எதிரே நின்ருள்.

'சுயநலமா? அப்பெரியாருக்குச் சீடனுகி ஞானச் செல்வம் பெறுவதும், பாகவத கைங்கரியம் புரிவதும் சுயநலமாகுமா?'

'என்னையும் துறந்து சுயநலமாகத் தானே அந்தச் செல்வத்தைத் தாங்கள் அனுபவிக்க விரும்புகிறீர்கள்?'

'நீ ஏற்கெனவே மதுரை மகாராணியென்று போற்றப்படுகிருய். இனிஉன்னையே மகாராணியாக முடி சூட்டிவிட்டு நான் அரசு துறக்க வேண்டும் என்றல்லவா எண்ணியிருக்கிறேன்?'

'அதைத் தானே சுயநலம் என்றேன்! அந்தத் துறவுச் செல்வத்திலே எனக்குப் பங்கு கிடையாதா?'

'என்ன? குழந்தை பராந்தகனையும் நீ துறந்துவிடத் துணிகிருயா? அவனுக்கு வயது வந்தபின் முடி சூட்டிவிட்டுத்தான் நீ விஷ்ணுசித்தரின் சிஷ்யையாகலாம்.



'குழந்தையைத்தான் மாறங்காரி தம் குழந்தைபோல் பாதுகாத்துத் தக்க பயிற்சி அளித்து வருகிருரே; அதற்குமேல் நாமென்ன செய்யக்கூடும்? எனக்குப் பிள்ளைப்பாசம் இல்லையென்ரு நினைக்கிறீர்கள்? உங்களைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமாய் இருக்கிறது. எனினும் உங்களை நான் எப்படிப் பிரிந்திருப்பேன்?'

'அவசியமானபோது பிரிவுக்கும் பின்வாங்கலாமா? எனக்குப் பிரிவு சுலபமென்ரு நினைக்கிருய்?'

'அது குறித்து நீங்கள் சொல்லித்தான் நான் அறிந்து கொள்ளவேணுமா? இதயம் இதயத்திற்குத் தெரியுமே! நம்முடைய பிரிவு கொஞ்சகாலமாவது அவசியமென நீங்கள் நினைக்கும் பட்சத்தில், நீங்களே இங்கு சிறுவனுக்கு ஆதரவாகச் சிறிது காலம் இருந்து வாருங்கள். நான் பெரியாழ்வாருக்குச் சிஷ்யையாகித் தங்கள் வருகையை எதிர்பார்த்திருப்பேன்.'

'பெரியாழ்வாரா?'

'ஆம், இதுகூடத்தங்களுக்குத் தெரியாதா? மதுரை விஜயத்திற்குப் பின் தமிழ்நாடு முழுதும் அப்பெரியாரைப் 'பெரியாழ்வார்' என்றல்லவா போற்றுகிறது? அதோ மந்திரியார் வருகிருர், அவரைக் கேட்டுப் பாருங்கள்.'

'ஆம், ஆம்; பெரியாழ்வாரென்று நாடும்

நகரமும் போற்றுகிறது நம் பட்டர்பிரானை. மதுரை விஜயத்திற்கு முன்பே இந்தப் பெருமை அவருக்கு உண்மையில் உரியதுதான். மதுரை விஜயம் இதை அறியாதவர்களுக்கும் அறிவித்து விட்டது. அது இருக்கட்டும். அக் கலகங்களுக்குக் காரணமான குற்றவாளிகளை விசாரிக்க வேண்டுமல்லவா? அதற்காக நான் இளவரசையும் அழைத்து வந்திருக்கிறேன்.

அதுகேட்ட அரசனும் அரசியும் உடம்போடு சொர்க்கம் புகுந்தவர்கள்போல் இன்பம் அடைந்தார்கள். 'அழைத்துவந்திருக்கிறேன்' என்பதை மந்திரி அழுத்திச் சொல்லியது, இளவரசான பராந்தகன் உள்ளேவந்து தாயாரையும் தந்தையாரையும் அடிகளில் விழுந்து வணங்கினன். பராந்தகனுக்கு வயது இப்போது பதினறு. எனினும் தாய்க்குக் குழந்தைதானே?

மக்கள்மெய் தீண்டல்
உடற்(கு) இன்பம்; மற்(று) அவர்
சொற்கேட்டல் இன்பம்
செவிக்கு

என்று வள்ளுவர் வருணிக்கும் குழந்தைப் பேரின்பத்தை, பிள்ளையை அணைத்துக்கொண்ட தாய் அனுபவித்துவிட்டாள்.

தந்தை மகனிடம் குருகுலக் கல்வியில் அவன் அடைந்துவரும் வளர்ச்சியைக் குறித்து ஆவலாகப் பல்வேறு கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தான். அதற்குப் பளிச்சுப் பளிச்சென்று பராந்தகன் சொல்லிக்கொண்டு வந்த விடைகள் ராஜஸிம்மனுக்கு அதிசயத்தையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே விளைத்தன. பூசுந்தரியோ,

குழல் இனிது, யாழ் இனிது
என்ப தம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்.

என்ற தமிழ்மறையின் உண்மையை அப்போதுதான் உணர்ந்து கொண்டவள்போல் பூரித்துப் போனுள்.

ஐந்து வயதுவரையில் பூசுந்தரியே வளர்ப்புத் தாயார் உதவியுடன் குழந்தையை வளர்த்து வந்தாள். விஷ்ணுசித்தர் குழந்தைக் கண்ணனைக் குறித்துப் பாடிய பாசுரங்கள் அந்த நாளிலேயே மதுரையிலும் மக்களிடையே வழங்கி வந்தன; செல்வ நம்பியின் தேவி ஸௌம்ய வல்லி பாடக் கேட்டுப் பூசுந்தரியும் அவற்றுள் சிலவற்றை மனப்பாடமாக்கி வைத்திருந்தாள். அந்தப் பாடல்களைப் பாடிக்கொண்டே தன் குழந்தையுடன் கொஞ்சி விளையாடுவாள். அந்தப் பழைய நினைவுகளெல்லாம் இப்போது உள்ளத்திலே பாய்ந்தோடிவந்தன.

அரசன் சிறுவனின் அறிவு வளர்ச்சியில் ஈடுபட்டு, தன் அருமை மகன் கடல் முளைத்த கதிரவன்போல், இருளோட்டிப் பக்திமார்க்கம் பிழையாது அரசு புரிவானென்றும், வெண் குடைக் குடைக்கீழ் செங்கோல் செலுத்தி மக்களுக்கு இகத்திலும் பரத்திலும் ஒருங்கே நன்மை பெருகத் தொண்டாற்றுவானென்றும், தன்னைக் காட்டிலும் அதிர்ஷ்டசாலியாகி மன அமைதியுடன்,

கலியரசன் வலிதளரப்
பொலிவினெடு வீற்றிருந்து

ஜனக மன்னனைப்போல் காலங் கழிப்பானென்றும், மகனுடைய எதிர்காலங் குறித்துப் பகற் கனவுகள் கண்டுகொண்டிருந்தான். அரசியின் கனவுகளோ சென்ற காலங் குறித்தவை. அரசனுக்குக் கால வெள்ளம் முன்னேக்கி ஓட, அரசிக்குப் பின்னேக்கி ஓடலாயிற்று.

பூசுந்தரி குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சியவண்ணம், அமுதவல்லி, ஆனந்த வல்லி, வேதவல்லி, கீதவல்லி முதலான தோழிகளுடன் இருக்கிருள். குழந்தையின் கைவிரல்களையும் கால் விரல்களையும் தொட்டுத் தொட்டுத் தோழிகளுக்குக் காட்டி,

முத்தும் மணியும்
வைரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத்
தலைப்பெய்தாற் போல், எங்கும்
பத்து விரலும்
மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட் டிருந்தவா
காணிரே!

என்ற விஷ்ணுசித்தரின் கண்ணன் பாட்டைப் பாடுகிருள்.

மருதாணியிடுவதுபோல் குழந்தையின் கால்களிலே ஒன்பது விரல்களுக்கு நவரத்தின வர்ணங்களும் பத்தாவது விரலுக்குப் பொன்னிறமுமாக இட்டு அழகு பார்த்து ஒரே மகிழ்ச்சிக் கடலில் ராணியின் தோழிமாரும் மூழ்குகிறார்கள். அரசன் வந்ததுகூடத் தெரியவில்லை.

அப்போதுதான் 'நான் ஏகாதிபதியாக இருந்த அன்பு—மகாராஜ்யத்திற்கு இனி ஒரு பங்காளி வந்து போட்டியும் போடுகிறான்!' என்ற உணர்ச்சியும் தனக்கு ஏற்பட்டதாக அரசனே ஏகாந்தத்தில் சொல்லிவிடுகிறான். அப்போது இருவரும் ஒரே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தே போகிறார்கள்.

* * * * * *

வேறொரு காட்சி. குழந்தை தனியாக விளையாடிக்கொண்டிருக்கிறது. முதல் முதல் தோல்வியுற்ற சேரன் ஒரு தந்தயானையைப் பரிசாக அனுப்பியிருந்தான். அதை அரசன் அரசியிடம் தானே கொண்டுவந்து நேரில் கொடுக்கிறான். இருவரும் அந்த வேலைப்பாட்டைச் சிறிது நேரம் வியந்தவண்ணமாய் இருக்கின்றனர். அப்போது தானாகவே விளையாடிக்கொண்டிருந்த குழந்தை பராந்தகனைப் பார்த்து விடுகிறாள் அரசி.

தந்தக் களிறுபோல்
தானே விளையாடும்

[களிறு–யானை; (இங்கே) யானைக் குட்டி.]

என்று பாடிக்கொண்டே குழந்தையை எடுத்துக் கொண்டு வருகிறாள்.

'என்ன? நீ கவியாகி விட்டாயா?"

'விஷ்ணுசித்தர் பாசுரமல்லவா? வேறு யாருக்குக் கவி இப்படித் தானே வந்து விளையாடும்.

* * * *

அரசி காலவெள்ளங்கடந்து பராந்தகனைக் குழந்தையாகக் கண்டு தனக்குள் தானே குலாவிக் கொண்டிருக்கும்போது, ராஜஸிம்மனும் காலவெள்ளம் தாண்டிப்போய், தன் மகன் பெரும் புகழ்பெற்று நல்லோர் பாராட்டுகளை ஏகபோகமாக அனுபவித்துக்கொண்டிருக்கும் வைபவங்களில் கலந்துகொள்கிறான். வடமொழி வாணர்கள் வந்து வந்து,

ஸ்ரீவரன்
ஸ்ரீ மனோஹரன்

வினய விச்ருதன்
விக்ரம பாரகன்

கிருபாலயன்
கிருதாப தானன்

கண்டக நிஷ்டுரன்
கார்முக பார்த்தன்

குணக் கிராஹ்யன்
குதூஹல மேரு

பண்டித வத்ஸலன்
பாண்டியநாதன்

என்றெல்லாம் போற்றுகிறார்கள். தமிழ் வாணரோ,

கலிப்பகை
குலவிளக்கு
கடற்படையன்
மணி நீள்முடி மன்னர் மன்னன்

என்றெல்லாம் புகழத் தொடங்குகிறார்கள். இத்தகைய புகழ்மாலைகள் சூடி உள்ளத்தினுள்ள பக்தி செயல்களிலெல்லாம் பரிமளிக்க அரசாண்டுகொண்டிருப்பதாகக் காண்கிறான் ராஜஸிம்மன்.

* * * * *

அரசியோ ஒரு கணம் குழந்தைக்குத் தொட்டில் ஆட்டுகிறாள்,

சோதிச் சுடர்முடியாய்!
தாலேலோ;
சுந்தரத் தோளனே!
தாலேலோ

என்ற பெரியாழ்வார் பாட்டைப் பாடியவண்ணம். குழந்தை அழுகிறது. செவிலித்தாய் எடுத்துக்கொள்ள வருகிறாள். அரசி அவளைத் தடுத்து,

ஐயா! அழேல், அழேல்!
தாலேலோ

என்று பாடிக்கொண்டே தாலாட்டுகிறாள். அழுகை அடங்காதபடியால் குழந்தையை நிலா முற்றத்திற்குக் கொண்டு போய் அம்புலி காட்டுகிறாள். அங்கே காத்திருந்த அரசனும் குழந்தையோடு கொஞ்சி விளையாடுகிறான்.

எங்கள் குடிக்கரசே!

என்று பாடுகிறாள் பூசுந்தரி.

* * * * *

இப்படியெல்லாம் [illegible]ரர்கள் இன்பக் கனவுகளில் தங்[illegible]நக்கும்போது தளபதி வில்லியும் அங்[illegible]சேர்ந்தான். அவன் வந்ததை அ[illegible]சியுப்[illegible]வில்லை, அரசனும் கவனிக்கவில்லை [illegible]னும், வில்லியாரே! அந்த ஆசனத்தில் அம[illegible]ள். குற்றவாளிகளை விசாரிப்பதற்குப் பூர்வாங்கமான ஏற்பாடுகளை ஏற்கெனவே செய்துவிட்டேன். இளவரசையும் அழைத்து வந்திருக்கிறேன்' என்றார்.

மந்திரி தளபதியுடன் பேசத்தொடங்கிய பின்புதான், அரசனும் அரசியும் தளபதி வந்ததைக் கவனித்தார்கள். தளபதி இளவரசனிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான். பொதுவாக ராணுவ விஷயங்களிலும், சிறப்பாக வில் வித்தையிலும் பராந்தகன் அடைந்திருந்த தேர்ச்சியைக் குறித்துக் கேள்விகள் கேட்டுத் திருப்தி அடைந்தான் வில்லி.

பிறகு அரசனும், அரசியும் வில்லியுடன் சிறிது நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்; சம்பாஷணைக்கிடையே, 'நாம் விசாரிக்க வேண்டிய முக்கியமான குற்றவாளி யார் என்று நினைக்கிறீர்கள்?' என்று அரசி கேட்டாள். அதற்குத் தளபதி உடனே பதில் சொல்லவில்லை.

'சேரன் தான்' என்றார் மந்திரி.

உடனே அரசி, 'சேரனைக் காட்டிலும் பெருங் குற்றவாளி அந்தப் போலி அஹிம்ஸா தர்ம மூர்த்தியல்லவா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? வில்லியாரே!' என்று கேட்டாள்.

'அதற்கென்ன சந்தேகம்?' என்று பதில் வந்தது.

'இருவரும் பெருங் குற்றவாளிகளே' என்றார் அமைச்சர், தளபதியின் முகத்தை உற்று நோக்கியபின்.

அரசனே சோர்வுற்றவன்போல், 'உண்மையைச் சொன்னால், நான்தான் பெருங் குற்றவாளியென்று தோன்றுகிறது! என்னுடைய ஏகாதிபத்திய ஆசையின் பரம்பரையிலே வந்தவைதான் சேரனின் கலக முயற்சிகளும், ஆனந்த தீர்த்தரின் தூண்டுதல்களும்!' என்றான்.

இப்படி அரசன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஒரு தூதன் ஓடிவந்து, செல்வநம்பி ஆஸ்தான மண்டபத்திற்கு வந்துவிட்டார். சேரன், ஆனந்ததீர்த்தர் முதலான குற்றவாளிகளையும் கொண்டுவந்திருக்கிறார்கள் நம்முடைய படைவீரர்கள்' என்று செய்தி சொன்னான்.

எல்லாரும் அரண்மனையிலிருந்து ஆஸ்தான மண்டபத்திற்குப் புறப்பட்டார்கள்.

(தொடரும்)

நாமொன்று நினைக்க—

ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.

மறு நாள் சியாமளாம்பாபுரத்தில் உஷக்காலத்தில் ஸ்நானத்திற்காக மணி, லாந்தல், தடிக்கம்பு, சொம்பு, பஞ்சபாத்திரம், உத்தரணி, விபூதி சம்புடம், ருத்ராக்ஷ மாலை, மடிசஞ்சி இவைகளுடன் வெளிக் கிளம்பி கொஞ்ச தூரம் போய்க்கொண்டிருக்கும்போது அந்தத் தெருவிற்கு சாலையிலிருந்து ஒரு வண்டி வருவதைக் கண்டு, “ரயிலிலிருந்து யாரோ வருகிறார்கள்போலிருக்கிறது. யார் வீட்டிற்கோ?” என்று யோசனை செய்துகொண்டு சிறிது நடப்பதும் திரும்பி பார்ப்பதுமாக இருந்தார். அப்படி அவர் கவனித்தபோது வண்டி அவர்வீட்டு வாசலை தாண்டிக் கிழக்கே சென்றுவிட்டதாய் தோன்றியதால் “யாரோ, பக்கத்து வீட்டிற்குப் போலிருக்கிறது. நம்வீட்டிற்கு யார் வரப்போகிறார்கள்!” என்று நினைத்துக் கொண்டு அவர் தன் வழி சென்றார்.

ஸீதாராமன் இருட்டில்சரியாய் கவனிக்காமல் சற்றுக் கிழக்கே போய் இறங்கிக் கொண்டு வண்டியை அனுப்பி விட்டு மாமாவாத்துத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். கதவைத் தட்டுவதா?—தட்டினால் யார் வந்து திறப்பார்களோ? மாமாதான் வருவார், மாமாவிடம் என்ன சொல்லுகிறது! மாமா ஸ்நானத்திற்குப் புறப்பட்டு போயிருந்தால் அம்மாமிதான் கதவைத் திறப்பாள். அம்மாமி கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லுகிறது? ஒருவேளை ஸரஸு வருவாளோ? அவளைக் காப்பாற்ற என்னை வரும்படி எழுதியிருந்தாள். என்னைக் காப்பாற்றிக்கொள்ள நான் ஓடி வந்திருப்பதை அவளிடம் எப்படிச் சொல்லுவேன்?...யாராவது வருகிறார்கள். அதைப்பற்றி என்ன சிந்தனை? மேலே விசாரணை நடக்குமே! என் விருத்தாந்தங்களை உள்ளபடி நான் சொன்னால் என் பேரில் குற்றம் ஒன்றுமில்லை என்பதை நம்புவார்களா? அல்லது நான் ஏதோ குற்றம் செய்துவிட்டு போட்டது போட்டபடியே இடத்தை விட்டுத் திருட்டுத்தனமாய் ஓடி வந்துவிட்டதாயும், அதை மறைக்க ஏதோ கட்டுக் கதைகள்சொல்வதாயும் நினைத்துவிடுவார்களா? அப்பாவிடம் இந்தக் கோலத்தில் போனால் கண்டிப்பாய் என்னைச் சந்தேகிப்பார். நான் திடீர் என்று பரீட்சைக்குப் படிக்க வேண்டிய நெருக்கடியான சமயத்தில் மேல் துணிகூட இல்லாமல் ஓடி வர வேண்டிய காரணம் என்ன? விஷயத்தை ஒளிக்காமல் சொன்னாலும் நான் செய்த குற்றத்தை ராமனா தன்பேரில்சாட்டிவிட யத்தனிப்பதாகத்தான் அப்பா நினைப்பார். ஸ்ரீமான் வெங்கிடசுப்பையர் அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்ட பிள்ளை எனக்கு எதற்கு என்று என்னை அப்பா அடித்து விரட்டுவார். அம்மாவிடமும் ஆதரவு கிடைக்காது. பணக்காரர்களி



டம் விரோதித்துக்கொண்ட எனக்குத் தாய், தகப்பன்கள் கூடப் புகவிடமாக மறுப்பார்கள் என்பது நிச்சயம். அப்பா கடிதத்திலிருந்து இதை நான் தெரிந்து கொள்ளாவிட்டால்என் அறிவுசூன்யம்என்று பிரமாணம் செய்து விடலாம்......

அங்குதான் என்ன நடக்கிறதோ? என்னை வாரண்டு தொடர்ந்து வருகிறதோ என்னமோ! எதுதான் நடக்காது? நன்மை தீமையை யார் கண்டார்கள்? வேங்கிட சுப்பையர் செக் திருட்டைக் கூடிய சீக்கிரம் கண்டு பிடிக்காமலிருக்கமாட்டார். பாங்குக்காரர்கள் என்னைத்தான் சுட்டிக் காண்பிப்பார்கள். அவர்கள் பேரில் என்ன தப்பு! ரூபாய் ஆயிரம்! எவ்வளவு ஊதாரியான பிரபுவானாலும் விஷயத்தை அதோடு விட்டுவிட மனதாகுமா! சுற்றியிருப்பவர்கள்தான் சும்மா இருப்பார்களா! போலீஸில் கம்ப்ளயிண்டு கொடுப்பார்கள். ராமனாதன் கேஸ் எக்ஸ்பார்ட்டியாகும்போது, "மௌனம் ஸர்வார்த்த சாதனம்" என்று இருந்து விடுவானே ஒழிய என்னைக் காப்பாற்றுவதற்காகத் தன் சரித்திரங்களை பகிரங்கப்படுத்தமாட்டான். பணத்தில் பிறந்தவர்கள் பிறர் வருத்தமறியமாட்டார்கள். அவனைக் காப்பாற்ற நான் ஓடிவிட்டேன். என்னைக் காப்பாற்ற அவன் என்னசெய்யப்போகிறான்?

ஓடிவிட்டதினாலேயே குற்றம் என் பேரில் தங்கி கொள்ள வசதியாகி விட்டது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள ராமனாதன் பின் தங்கமாட்டான். சிவராமனும் என்னைக் குற்றவாளியாக்குவதற்குத் தயங்கமாட்டார், ஒரு நொடிப்பொழுதில் எனக்கு வந்த நொடிப்பை யோசித்தால் தெய்வம்தான் மனுஷ்யனை ஆட்டி வைக்கிறது என்பது ருசுவாகிறது, ஆனால் இந்த அபவாதம் கொஞ்ச நாளில் தீர்ந்துவிடும். போலீஸ் கேஸ் வந்தால் நான் அதற்கு மேலும் ராமனாதனின் தாட்சண்யத்தை எதிர்பார்க்கவேண்டியதில்லை. மேலும் ராமனாதனின் ரகசியப்பற்றுக்கள் அதிக நாள் ரகசியமாய் இருக்க முடியாது, அவன் இடைவிடாது உஷாவை நாடுவது நிச்சயம், மறுபடி மாட்டிக்கொள்ளலாம். அவன் சரித்திரம் ஒன்றொன்றாய் வெளிவரும்போது செக் வர்த்தமானமும் வெட்ட வெளிச்சமாகிவிடும். என்னைத் தூஷித்தவர்கள் தலை குனிவார்கள். என்னைச் சந்தேகித்தவர்கள் பச்சாத்தாபப்படுவார்கள். ஸ்ரீமான் ஐயர் அவர்களின் அன்பு என்றும் என் விஷயத்தில் குன்றாது. அவர் மட்டும் என்பேரில் போலீஸ் நடவடிக்கை எடுக்கச் சம்மதிக்கமாட்டார் என்றுதான் எனக்குத்தோன்றுகிறது. இருந்தாலும் நான் கொஞ்சகாலம் அக்ஞாதவாஸம் செய்துதான் ஆகவேண்டும்— இந்தச்சக்கிரம் சுழன்று நிலைமை நேராகும் வரை, ஆனால் தற்சமயம் அபவாதமும் மானக்கேடும், பயமும், கிலேசமும், விரோதமும், மனஸ்தாபமும் ஏற்படுவதை யாராலும் தடுக்கமுடியாது. நாளைக்கே மணி மாமாவின் உதவியால் ரூபாய் ஆயிரம், ஐயர் அவர்கள் பாங்குக் கணக்கிற்கு ஈடு செய்வதாய் வைத்துக்கொண்டாலும், குற்றம் நீங்காது. குற்றத்திற்குத் தொடர்புள்ள தண்டனைகளைத் தவிர்க்க ரூபாய் செலுத்தப்பட்டதாய்தான் நினைப்பார்கள். போர்ஜரி செக் மூலம் மோசடியாய் பணம் பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொள்வதற்கு இதுவே ஒரு அத்தாட்சியாகக் கருதப்படலாம். கடைசியில் ராமனாதனின் சினேகம் இவ்விதம் முடிந்தது, ஆனால் ராமனாதன் அயோக்யனல்ல, என்னிடம் நட்புக்கொண்டவன்தான். அசூயை, அற்பபுத்தி, விகல்பமான குறுகிய யோசனைகள் கோழ்ச்சொல்வது, குற்றம்சாட்டுதல் மேதாவித்தன்மை வீண்டம்பம், தற்புகழ்ச்சி, அகம்பாவம் விறைப்பு, பணச்செருக்கு சுயநலத்தினால் இரக்கமின்மை, அபகரித்தல் முதலிய அக்கிரமச் செயல்களில், துணிவு பணத்தைக் குறி வைத்து வெட்கங் கெட்டுப் போதல், நன்றி மறத்தல், கோட்டான் சந்திர வெளிச்சத்தை வெறுப்பதுபோல் தன் திருஷ்டிக்கு ஏற்றதல்லவென்று நற்குணங்களைப் புறக்கணித்து நிந்தித்தல், முதலிய துர்க்குணங்களில் ஒன்றேனும் அவனிடம் இருப்பதாய்க் கூற முடியாது. காலத்தின் போக்கு, சந்தர்ப்பங்களின் நெருக்கடி, மனதின் உறுதியின்மை, சுற்றியிருப்பவர்களின் கலப்பு, சகவாசத்தினால் ஏற்படும் மதிமயக்கம், சுயநல அனுமதிப்பு எல்லாம் சேர்ந்து நல்லவனைக்கூடப் பொல்லாதவழியில் இழுத்து மாட்டிவிடுகின்றன. நடப்பது நடந்தே தீரும். இந்நிலைமையில் எனக்கு மாமாவைத் தவிர வேறு புகலிடம் இருப்பதாய்த் தோன்றவில்லை. பேராபத்து வந்தபோது மனம் எவனைத்துணைவனாய் நம்பி நாடு

கிறதோ, அவனே அந்தரங்க பந்து ஆப்த மித்திரன் கருணை செய்யும் குருநாதன், சரணமளிக்கும் குலதெய்வம். மணிமாமா தான் எனக்கு அத்தகைய பந்து, மித்திரன், குருநாதன், குலதெய்வம். ஆகையால் தான் தாய், தகப்பனார்களிடம் போகாமல் இங்கு வந்தேன். நான் உண்மையில் குற்றம் செய்திருந்தாலே என் மாமா என்னை மன்னித்துவிட்டு ஆதரிப்பார்.... ஆனால் நான் அவருக்கு எழுதிய பதில் அவருக்குக் கோபத்தை மூட்டியிருக்குமோ என்னமோ?— எப்படியிருந்தாலும் நேரில் கண்டால் அவர் பிரசன்னமாகிவிடுவார் என்று எனக்குத் தைரியம் தான்''...............உன் பக்கத்திலிருந்து வாசல் கதவை யாரோ திறப்பதற்குப் பிரயத்தனப்படுவது தெரிந்தது. கதவை இழுக்க பலம் போதாத ஒருவர் அதிக சிரமப்படுவதுபோல் தோன்றிற்று. பொழுது விடியப்போகிறதல்லவா?......... ஸீதாராமன் திண்ணை மூலையில் போய்ப் படுத்துகொண்டு அரைவாசிக் கண்களை மூடிக்கொண்டான்.

கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள் ஸரஸ்வதி. கையிலிருந்த கல் விளக்கைஅவள் பிறையில் வைத்தாள். மறுபடி உள்ளேபோக திரும்பினாள். திண்ணையோரத்தில் யாரோ படுத்திருப்பதைக் கவனித்தாள். "யார் அது?" என்று சற்று கண்டிப்புடன் கேட்டாள்: ஸீதாராமன் எழுந்து உட்கார்ந்தான். "மாமா இருக்கிறாரா? என்று பதிலுக்குக் கேட்டான்.

"யார் என்ற வார்த்தை சந்தேகத்தில் தோய்ந்து உள்குரலில் வெளிவரும் முன் ஸரஸ்வதி சந்தேகம் தெளிந்து வாசற்படியில் கால் வைத்தாள்.

"ஸரஸு" என்றான் ஸீதாராமன்.

ஸரஸு வாசற்படி மறைவில் நின்று கொண்டாள். "நான் ரயிலிலிருந்து வருகிறேன். போட் மெயிலில்தான் வந்தேன். திண்ணையிலேயே சற்றுப் படுத்தேன். மாமாவிடம் மறுபடி நைஷதம் படிப்பதற்காக வந்திருக்கிறேன். முன் படித்ததெல்லாம் மறந்து போய்விட்டது" என்றான் ஸீதாராமன். முகவிகாஸத்துடன். ஸரஸு தலைநிமிராமல், "அம்மாவைக் கூப்பிடுகிறேன்" என்று காதில்பட்டதும் படாததுமாய்ச் சொல்லிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

ஸீதாராமன் எழுந்திருந்து உள்ளே சென்று முன்னடித் தாழ்வாரத்தில் போய் நின்றான். நாகம்மாள் தயிர் கடைந்து கொண்டிருந்தாள். ஸரஸு ஏதோ சொன்னதைக் கேட்டு மத்தை நிறுத்திவிட்டுக் கூடத்திற்கு ஓடி வந்தாள். ஸீதாராமன் தாழ்வாரத்தில் நிற்பதைப்பார்த்ததும் அவளுக்கு இருந்த ஆச்சரியத்திற்கு அளவில்லை. மருமான் ஸீதாராமனை நாகு அன்புடன் வரவேற்றாள். பொதுவாய் அவன் க்ஷேமத்தை விசாரித்துவிட்டு அவனைப் பல்தேய்க்க அனுப்பிவிட்டுப் பரபரப்புடன் காலைக் காரியங்களில் ஈடுபட்டாள்.

சிறிது நேரத்தில் மாமா மணி ஸ்நானம் ஜபங்களை முடித்துக்கொண்டு பிரும்ம தேஜஸ் ஜ்வலிக்கும் திவ்ய தோற்றத்துடன் கையில் தீர்த்தப் பாத்திரம் தலையில் மடிசஞ்சியும் தாங்கிய வராய்த் திரும்பி வந்தார்.

ஸீதாராமனை அவர் பார்த்துப் பரமானந்தமடைந்தார். "நான் ஸ்னானத்திற்குப் புறப்படும்போது ஒரு வண்டி வரக்கண்டேன். அது நேராகக் கிழக்கேயல்லவா போச்சு! நீயா அதில் வந்தவன்?

"இருட்டில் வீடு அடையாளம் தெரியவில்லை மாமா!"

"ஆமாம். நீ ஊருக்கு வந்து எவ்வளவு நாள் ஆகிவிட்டது? பட்டணத்து மனுஷ்யனாகி விட்டாய்!"

"இனிமேல், மாமா! உள்ளூர் மனுஷ்யன்தான்' என்றான் ஸீதாராமன்.

காப்பி சாப்பிட்டபிறகு மாமா ஸீதாராமனிடம் தனிமையில் அவன் வந்த விருத்தாந்தத்தைப் பற்றி விசாரிக்கலானார்.

ஸீதாராமன் மாமாவிடம் ஆதியோடந்தமாய் பட்டணத்தில் நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னான். மேல் விளையக் கூடிய விபரீதங்களையும், தன் மனதுக்கு ஏற்படும் பயங்களையும் எடுத்துக் காட்டினான். தான் திடீரென்று மேல் துண்டுகூட எடுத்துக்கொள்ளாமல் ஓடிவர நேர்ந்த காரணத்தையும் விளக்கினான். சில நாட்கள் தான் அஞ்ஞாதவாசமா யிருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தையும் வற்புறுத்தினான். தன் பெற்றோர்களிடம், தான் செல்ல விரும்பாததற்கும், அவர்கள் அறியாமலே ஒளிந்துகொண்டு காரியங்களின் போக்கைக் கவனிக்க வேண்டிய அவசியத்தையும்

வாதித்தான். பணம் செலுத்தப்படவேண்டியது முதல் காரியம் என்பதையும் பிரஸ்தாபித்தான்.

மணி மாமா அனுதாபத்துடனும், வருத்தத்துடனும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டார். ஸீதாராமன் செய்ததையும், செய்ய உத்தேசித்ததையும் ஆமோதித்தார். அவன் திட்டப்படி, தான் உதவப் பூராப்பொறுப்பையும் அங்கீகரித்தார். பணக்காரர்களின் சகவாசம் நல்லதாய் முடியாது என்று பல கோட்பாடுகளுடன் சாதித்தார்.

ஸீதாராமனை வீட்டிலேயே ஸ்நானம் செய்யச் சொல்லிவிட்டு வெளியில் சென்று தனக்குக் கொடுக்கல் வாங்கல் உடைய ஒரு வியாபாரியிடம் பணம் முகதலையாக ரூபா ஆயிரத்தை வாங்கிக்கொண்டு பத்து மணிக்கெல்லாம் பாங்கிற்குச் சென்று அந்தத் தொகைக்கு ஒரு "டிராப்டு" வாங்கி ரிஜிஸ்டர் போஸ்டில் மெட்ராஸில் ஸ்ரீ வெங்கிட சுப்பையரின் பாங்கு அக்கவுண்டிற்கு அது 'கிரெடிட்' ஆகும்படி அனுப்பிவிட்டுப் பன்னிரெண்டு மணிக்குள் வீட்டிற்கு வந்தார். உடனே போஜனம் செய்துகொண்டு ஸீதாராமனுடன் வாடகை வண்டியில் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று அங்கு ஒண்ணே முக்காலில் ஸீதாராமனைத் திருச்சிக்குத் தன் மைத்துனன் போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் கோபாலனிடம் போயிருக்கும்படி அனுப்பிவிட்டு வீடு திரும்பினார்.

"ஏன்னா? எங்கே வந்தான்! எங்கே போகிறான்? ஏன் ஆத்துக்குப் போகவில்லை! என்ன, ஒன்றும் புரியவில்லையே? பட்டணத்திலேயிருந்து வந்தவனுக்கு ஒரு மூட்டை முடிச்சு ஒன்றும் இல்லையே, அப்பா, அம்மாவைக்கூடப் பார்க்க வேண்டாமென்று எங்கேயோ அவசரமாய் ஏற்றி அனுப்பிவிட்டு வருகிறீர்களே! என்ன சமாசாரம்? எனக்குச் சொல்லப்படாதா? யோசித்துப் பார்த்தால ஏதோ சந்தேகம் தட்டுகிறதே! தப்பு ஏதாவது நடந்திருக்குமோ?"—என்றெல்லாம் நாகு மணியை விசாரிக்கலானாள்.

மணி பதில் தயாராக வைத்திருந்தார். "உன் தமையன் கோபாலன் இவனுக்கு ஏதோ போலீஸ் உத்தியோகம் செய்து கொடுப்பதாயும், அதற்கு உடனே புறப்பட்டு வரும்படியும் எழுதியிருந்தானும். அத்திம்பேருக்கு இவன் போலீஸ் உத்யோகத்திற்குப்போக சம்மதமிராது. அதற்காகப் போகும் வழியில் என்னைமட்டும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று இறங்கியிருக்கிறான். மூட்டை முடிச்சுகளை ஸ்டேஷனிலேயே வைத்திருந்தான். உத்யோகம் ஆகிவிட்டால் பையன் பணம் சம்பாதிக்கும்போது அத்திம்பேருக்குச் சமாதானம் ஆகிவிடும். இதற்காகத்தான் ரகஸியம். வேறு ஒன்றுமில்லை."

"நாகுவுக்கு இந்தப் பதில் திருப்தி அளித்தது ஆனால் உத்யோகமாகிவிட்டால், நம் ஸரஸுவைக் கொடுத்துக் கல்யாணத்தை முடித்து விடலாம் போலிருக்கிறதே, கோபாலன் வார்த்தையை இவன் தட்ட முடியாதே?"

"எனக்கும் அந்த யோசனைதான்" என்றார் மணி. நாகுவுக்குப் பூரண சந்தோஷம்.

"நீங்கள் அன்றைக்குப் பொய்க்காக மாப்பிள்ளை தானாகவே என்னை எதிர்கொண்டு வந்துவிட்டான் என்று சொன்னீர்களே! அது நிஜமாய்ப் பலித்துவிட்டதே!"

"என் வாயால் பொய்யே வராது. வந்தாலும் அது நிஜமாகிவிடும்"

(தொடரும்)

சத்வைத்யசாலை நஞ்சனகூடு
"நஞ்சன்கூடு பல்பொடி"
பாக்டெரியின் சிறந்த மருந்துகள்
I.D.L.
குழந்தைகளுக்கு
12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
குடும்ப அவசியங்கள்
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விடிபேதிக்கும் (காலரா)
23 பெமிநோ (பெயின பாம) தலைவலி, வாயுபிடிப்பு .....
தினஉதவிகள்
61 நஞ்சன்கூடு பல்பொடி நெ 61. பல் உபாதைகளையும் கண்டிக்க
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்
55 இஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி.
மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்
ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

காஷ்மீர்-தஸூம் என்ற மலர் மூலிகையை கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்
M.P. & Co.'s ஸாண்டலக்ஸ் நறுமண சந்தனக் களிம்பு தீப்புண், வெட்டு, சொறி பரு, புண்களுக்கு (கூடிவர உதவி)
M R ஜெட்டப்பா அவர்களின் பிரேமலீலா மைசூர் ஊதுவத்திகள் எமார்ஜஸ், அகர், அம்பர்
ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறஸ்.

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

வெட்டுகள், காயங்கள், புண்கள் & ரணங்கள்

உலகப் புகழ்பெற்ற ஜாம்-பெக் உபயோகித்தால் குணமடையும்



உலகின் மிகச் சிறந்த கிருமிநா• மருந்து ஜாம்-பெக் அதன் மருந்து எண்ணெய்கள் சருமத்துக்குள் புகுந்து வேலை செய்வதால்வேகமாகவேநிவாரண மளிக்கும் பாதிக்கப்பட்ட கிரந்திகளுக்கு ஜாம்-பெக் சமனமூட்டி விஷம் தீண்டப்பட்டு கிருமி நிறைந்த சருமத்தை சுத்தப்படுத்தி குணமாக்கும் மிருகக்கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

சருமநோய்கள், காயங்கள், பூச்சி கடிகள், புண்ணுகி வலிக்கும் கால்கள், தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி பி டி மதராஸ்

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

வைத்தியரத்ன யு.ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்குரூ.7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸூத்ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்

பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல்,மலச்சிக்கல், ஞாபககுறைவு,பித்தம்,காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

சக்தி ஆரூடம்!

சென்னை சர்க்கார் மீன் இலாகா, கெஜட்பதவி உத்தியோகத்திலிருக்கும் Sri S. V. கணபதி (Hydrologist) 7-6-'48ல் எழுதுகிறார்:— "தங்கள் பலன்கள் ஆச்சரியமானவை. பலன்களில் மிகவும் திருப்தி."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையும் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம் 40-நாள் மருந்து ரூ. 3-12-0. பாக்கிங், தபால்சார்ஜ் இடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப்பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி R. M. நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

ரீடா

அழகிய கேசத்தை வளர்க்கிறது

ரீடா, கூந்தல் ஆரோக்கியத்தில் ஒரு புது முறை. அது கூந்தல் வேர்களுக்குத்தேவையானஇயற்கை போஷாக்கு களை யூட்டி, பொடுகு வழுக்கையைத் தடுத்து அபார வசீகரத் தோற்றமுள்ள பட்டுப்போன்ற மிருதுவான கூந்தலை அடர்த்தியாக வளரச்செய்கிறது. அது பறட்டையான கூந்தலுக்கு பள பளப்பு அளிப்பதுடன் இஷ்டத்திற்குகந்தவாறு கூந்தலை படியவைப்பதற்கும் சிறந்தது. ஒரு புட்டி ரீடா வாங்கி உங்கள் கூந்தலுக்கு புத்துயிரளித்து புது அழகு பெறச் செய்யுங்கள்.

எங்கும் கிடைக்கும், ஒரு புட்டி விலை அணா 15.

ஹிந்தி, ஆந்திரா, தமிழ், கன்னட சினிமா நக்ஷத்திரங்களெல்லோரும் போற்றுகின்றனர்.

லலிதா பவர்:—மிகச்சிறந்த கூந்தல் டானிக், தேவையுள்ளோர் அனைவருக்கும் ரீடாவையே சிபார்சு செய்வேன். நம்தாய் நாட்டில் இவ்வளவு அருமையான சரக்குகளை தயாரிப்பதுபற்றி பெருமையடைகிறேன்.

சாரதா ஜுனர்கார்:—எனது சமீபத்திய அனுபவம் இது. கூந்தல் உதிர்வதை நிறுத்துவதற்கு ரீடாவைப்போன்ற அற்புத டானிக் வேறு கிடையாது. கேசத்தைப் பட்டுப்போல் மிருதுவாக்கி பளபளப்பூட்டும் அற்புத மூலிகைகள் இந்த தைலத்தில் இருக்கின்றன. கேச டானிக்குகளில் ரீடா மிகச்சிறந்தது என்பது உறுதி.

கே. ஈச்வர்லால்:—நான் ஒருமுறை ரீடா உபயோகித்தேன். அது முதல் என குடும்பம் முழுவதும் ரீடாவையே உபயோகித்து வருகிறோம். தைலங்களில் ரீடா ஹேர் டானிக் மிகச்சிறந்தது என்பதை நண்பர்கள் அறிவது திண்ணம்,

சுஷில் குமார்:—நான் ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். என் கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவிபுரிகிறதாகக் கண்டேன். மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மூளை குளிர்ச்சிக்கும் நான் இதை யாவர்க்கும் சிபார்சு செய்கிறேன்.

ஜயந்த்:—நான் கடந்த சில மாதங்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்ததில் அது சிறந்த தைலம் என கண்டேன். ஸ்திரீகளின் கூந்தல வளர்ச்சிக்கு ஏற்ற டானிக். ஆடவர்களின் கூந்தலைப் பாதுகாக்க சிறந்த டானிக்.

கண்ணாம்பா:—ரீடா எல்லாவிதத்திலும் சிறந்தது என மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். அது உண்மையாய் அவ்வளவு பயனுள்ளது.

புஷ்பவல்லி:—ஒரு வருஷ காலமாக என் மயிர் உதிர்ந்துகொண்டே இருந்தது. ரீடா உபயோகித்ததிலிருந்து மயிர் கொட்டுவது நின்றது. ரீடா என் கூந்தல் அழகைப் பாதுகாக்க உதவி புரிந்தது. ரீடா ஒரு சிறந்த கூந்தல் டானிக் என்பதே என் அபிப்பிராயம்.

சூர்ய குமாரி:—ரீடா நறுமணமுள்ளது. அதை தடவிக்கொண்டால் குளிர்ச்சியூட்டுகிறது. நான் இனி ரீடாவையே உபயோகிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

கிருஷ்ணவேணி:—நான் சிலகாலமாக குளிர்ச்சியாக இருக்கும் நறுமண ரீடாவை உபயோகித்து வந்தேன். மயிர் உதிர்வதை தடுக்கவும் புது கேசத்தை வளர்க்கவும் ரீடா மிகச் சிறந்த டானிக் என்றே கூறுவேன். அந்நியநாடுகளிலிருந்து வரும் கூந்தல் டானிக்குகளைவிட ரீடாசிறந்தது என்பதே என் அபிப்பிராயம்.

வசுந்தரா தேவி:—நான் ரீடா உபயோகித்ததில் அடர்த்தியான கூந்தல் வளர்ச்சிக்கும், பாதுகாப்பும் அது சிறந்த கூந்தல் டானிக என்று நிரூபித்துவிட்டது.

ஆர். பத்மா:—என்னை அழகூட்டும் என்னுடைய நீண்ட கருத்த கூந்தலுக்கு ரீடாதான் காரணம். அது எவ்வளவு சீக்கிரத்தில் பலனை அளிக்கிறது! அது என் கூந்தலை மிருதுவாக்கியதுடன் அடர்த்தியான வளர்ச்சியையும் அடைந்திருக்கிறது. கூந்தல் அழகுக்கு ரீடாவையேதான் அனைவருக்கும் சிபார்சு செய்வேன்.

ராஜம்மா:—கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நான் ரீடா உபயோகித்ததில் எவ்வித கூந்தல் சம்பந்த உபத்திரவங்களுக்கும் அது இணையற்றது என்று அறிந்தேன். அதில் கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையானதும் கேச உபத்திரவங்களைத் தடுப்பதுமான மருந்துகள் இருக்கின்றன. அடர்த்தியாக அழகான கூந்தல் வளர்ச்சி விரும்பும் ஸ்திரீகள் அனைவருக்கும் ரீடா சாலச்சிறந்தது என்றே கூறுவேன்.

லக்ஷிமிபாய்:—சில காலமாக ரீடா நான் உபயோகித்ததில் அது ஈடு இணையற்றது என்று எனக்குத் தோன்றுகிறது.

வி. என். ஜானகி:—நான் வெகு நாட்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். அது கூந்தல் வளர்ச்சிக்கும் கூந்தல் பாதுகாக்கவும் சிறந்த டானிக்.

எ. ஆர். சகுந்தலா:— நான் அனேக நாட்களாக ரீடா உபயோகிக்கிறேன். அது அளிக்கும் பயன் ஏராளம்.

ரீடா ஹேர் டானிக்

Regd. No. 2514.

“நம்பிக்கையே நாணயம் தரும்”

தீட்டிமத்தி (தென்குடகு)

ஜனவரி 2, 1947.

நான் முதன் முதல் சில வைரங்களும் ரத்னங்களும் வாங்க நினைத்தபோது மனதிற்குள் ஒரு பெரிய போராட்டம நிகழ்ந்தது. ஏனெனில், ரத்னப்பரீட்சையில் தேர்ந்த நிபுணர் உதவியின்றி ரத்னங்கள் வாங்கினால் ஏமாற்றமடைய வேண்டுமென்பதாக ஓர் எணணம் வேரூன்றும்படி செய்துவிட்டனர் சிலர். ஆனால் உங்கள் விளம்பரத்தைப் பார்த்தபின் அவ்வெண்ணம் சிறிது மறைந்து தபால்மூலமாக உங்களிடம் ஓர் ஆர்டர் கொடுக்கத் துணிந்தேன். எனினும் கொஞ்சம் பயத்துடன்தான். இதுவரை உங்களுடன் நேரடியான தொடர்பு இல்லாததே காரணம்.

இப்பொழுது தங்களிடம் ஆர்டர் கொடுத்ததுபற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனக்குத் தேவையான நகைகளையும், உத்தேச மதிப்பு அளவையும் குறிப்பிட்டெழுதியவுடன் மூன்று நகைகள்–நெக்லஸ், பிரேஸ்லட், மோதிரம் அனுப்பியதைப் பெற்றுக்கொண்டு பூரண திருப்தியடைகிறேன். சிறந்த ரத்னங்கள பதித்து அழகிய மோஸ்தர் வேலைப்பாடுள்ள இந்நகைகள் ஒன்றையொன்று தூக்கியடிக்கின்றது. இவ்வளவு சீக்கிரமாகவும் சிறப்பாகவும் ஆர்டர்களைப் பூர்த்தி செய்வீர்கள் என்று நான் முதலில் நினைக்கவேயில்லை,

உங்களைப்போன்ற கியாதிபெற்ற ஸ்தாபனங்களில் நேரடியாக வியாபாரம் செய்வதுதான் உத்தமம் என்பதை நான் திட்டமாகச் சொல்வேன். உங்கள் விளம்பரத்தில் குறிப்பிட்டிருப்பது அனைத்தும் உண்மை. சுலபமானதுடன் நம்பிக்கையானதும்.

வந்தனம்.

உங்கள் அன்பன்,

(ஒப்பம்) N. சிட்டியப்பா.

நசுப்பிக்கப்பட்டது

ஸூராஜ்மல்ஸ்

நம்பிக்கையான நகை வியாபாரிகள்

“1895 ஸு முதல்”

313, எஸ்ப்ளனேட்,

மதராஸ்.